உ

சிவமயம்

கணபதிதுணை

ஞானவல்லி

ஓ ரினிய தமிழ் நாடகம்

இஃது

வள்ளிநாடகம், மநோல்லாசினி, சுத்தஸேநன்

முதலிய நாடகங்கள் எழுதிய

எட்டயபுரம் ஸம்ஸ்த்தானம் ஆதீனகர்த்தரவர்களாகிய

மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ

ராஜஜகத்வீரராம

வேங்கடேஸ்வர எட்டப்ப

மஹாராஜா அய்யனவர்களால்

இயற்றப்பெற்று

சென்னை

கார்டியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

1915

Registered Copy right] [*All Rights reserved*

MADRAS: G. C. LOGANATHAM BROS.,
THE GUARDIAN PRESS, 1915.

உ

சிவமயம்

நூன்முகம்

சிவபெருமானுக்குப் பழம்பதியாகிய பாண்டிநாட்டின் ஒரு பகுதியாகிய எட்டயபுரத்தைத் தாயினு மினிதாய் அன்புட னாண்டுவரும் மன்னவர் சிகாமணியாம் இந்நாடக வாசிரியர் அழியாமுதலாகிய தமிழ் மொழிக்கண் ஆர்வம் பூண்டு மாந்தர்க்கு உறுதிபயப்பதாகிய நூல்களை யியற்றுவதே கண்ணாக வருடந்தோறும் தக்க நூலொன்றை வெளிப்படுத்திவரா நின்றனர். சென்ற வருடம் வெளிப்போந்த சுத்தஸேநன் எனும் நாடகக் காப்பியத்தின் முகவுரைக்கண் ஆசிரியர் வரலாற்றைக் கூறுமிடத்து எட்டயபுர ராஜபரம்பரையை ஓர் சிறிது விளக்கஞ்செய்துளேன். அவண் இடம் போதாமையின் நமது மன்னவரது பிராதாக்களது புகழை விரிக்காது வாளாவிட்டேன்.

நல்லொழுக்கத்தின் தலைநிற்கும் நமது இளைச மன்னவர்க்கு இருகண்களுக்கிணையாய் அவர்களது சிறிய தகப்பனாரவர்களது வயிற்றிற் பிறந்த இருசகோதரர்கள்

உளர். அவர்களுள், முதற்றம்பியார் தங்கசுவாமிப் பாண்டியனவர்கள். இவர்களே மெய்ப்பெயர் படைத்த மன்னவரென வுறுதியாய்க் கூறலாம். 'தங்கத்திற்குப் பங்கமில்லை' யென்பார்களன்றே! அன்றியும் ஏதேனுமொரு அரிய பொருளைப்பற்றிப் பேசுமிடத்து 'அதுகிட்டின் தங்கமாயிற்றே' எனவும் வழக்குளதன்றே! அவ்வாறே, தங்கசுவாமிப் பாண்டியனவர்கள் சகல சற்குணங்கட்கும் இருப்பிடனாய் பேருபகார சிந்தையே வடிவமாக எட்டயபுரம் மன்னவர் பெருமானுக்கு வலது கையாயிருந்து இந்நாட்டின் புகழை ஓங்கி வளர்தரச் செய்யா நின்றனர். தெய்வபக்தியும், தமிழ்க்கண் ஆழ்ந்த அறிவும், அரிய நூல்களின் உள்ளீடாகிய ரஸங்களைக் கவரும் மதிநுட்பமும் படைத்தவர்கள். எவர்பக்கலும் கண்ணோட்டம் பூண்டவர்கள். ஈசுவரனது தண்ணருளால் சிறிது மாதங்கட்கு முன்னர் இவர்களது உதரத்திருந்து அரசிளந்தோன்றலாரொருவர் உதித்து வளரா நின்றனர். எல்லாம் வல்ல கடவுள் தீர்க்காயுளைக் கொடுத்து இரக்ஷிக்கவேண்டும். அன்றியும் இளசை மன்னவர்க்கும் புத்திரப்பேற்றைக் கடிதில் அருளவேண்டியதும் அவர் பொறுப்பே.

காசிச் சுவாமிப் பாண்டியனவர்கள் நமது மன்னவர் பெருமானுர்க்கு இரண்டாவது தம்பியார். தெய்வகலைகளுளொன்ருகக் கருதப்படும் ஓவிய நூலை முழுமுற்றும் ஆழங்கண்டவர்கள் எனத் திண்ணமாகக் கூறலாம். கண்ணுற் கண்டதைக் கையாற்காட்டும் அரிய கலைஞர். மிக்க மனவுறுதி படைத்தவர்கள். ஸங்கீதத்தினிடத்தும் தக்கபடி ஆர்வங்கொண்டவர்கள். நிற்க.

இந்நாடகக் கதையின் சுருக்கம் வருமாறு :

ஓர்காலத்தில் ஹஸ்தினபுரத்தை யாண்டுவந்த கீர்த்திஸேந மகாராஜனுக்குப் புத்திரப்பேறு கிட்டாமையின் அவன் மிகவும் மனம்நொந்து வாடாநிற்புழி, அவனது மந்திரியாகிய சௌரியகேது தவத்தால் மகப்பேறு கிடைக்கவல்லதென நல்லறிவு கொளுத்தவே அரையன் அவ்வாக்கைக் கடைப்பிடித்துப் பொருக்கென வெழுந்து அரசியற் சுமையை தனது மந்திரியிடம் ஒப்புவித்துவிட்டுக் கானகஞ்சென்று பஞ்சாக்னிமத்தியிற் றவம்புரியவே சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி அரையனும் அவனது மந்திரியும் புத்திரிகளைப் பெறுமாறு அருள்செய்துவிட்டு உருக்கரந்தார். அவ்வாறே இருவர்க்கும் பெண்கள்பிறந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து யௌவனத்தை யடைந்தனர். இவ்விரு பெண்மணிகளும் ஓர்நாள் உத்தியானஞ்சென்று மலர்பறித்து மாலைகளைத் தொடுத்துக்கொண்டு காலத்தை யினிதாய்க் கழித்துக்கொண்டிருக்கும்தருணம் ஓர் அரக்கன் திடீரெனவந்து அரையன் புத்திரியாகிய ஞானவல்லியைத் தூக்கிக்கொண்டு விசும்பாறுகச்சென்று தனது குகைக்கண் சிறைவைத்தான்.

அரையன் இதனைத் தெரியவே துக்கமாற்றலாகாது மூர்ச்சித்து வீழ்ந்தான். சைத்தியோபசாரத்தால் மன்னன் அறிவு தெளிந்தெழவே மந்திரி காணுமற்போன அரசிளங்குமரியைக் கிட்டும் வழிநாடி ஐம்பானூறு தேசத்திற்கும் வள்ளுவரை யனுப்பிப் பறையறைவித்து 'எவ்வீரனேனும் அரக்கனைக்கொன்று ஞானவல்லியை மீட்டு

வருவனுயின் அன்னவற்கு ஞானவல்லியை மணம் புரிவிப்பதுடன் ஹஸ்திஞபுரத்து ஆட்சியையும் தருவதாக ஹஸ்திஞப்புரத்தரசன் உத்தரவு' என எங்கணும் முழக்குவித்தான்.

கன்னிகையையும் அரசுரிமையையும் விரும்பி செளரியத்தை நாட்டப்பார்த்தவர் பலர். சிலர் அரக்கனுக்கிரையாயினர். குந்தள தேசத்திளவரசனுகும் அதிரூபன் மிகுந்த தோள்வலி படைத்தவன். அன்றியும் ஞானவல்லியை மணம்புரிய வேண்டுமென மிகவும் ஆர்வங்கொண்டவன். தான் காமித்த பெண்மணிக்குற்ற இக்கட்டையறிதலுமே மிகவும் மனம் நொந்து அரக்கன்மேல் வெகுளிகொண்டு அவளை மீட்க வுடனே பிரயாணமானுன். அவனுக்குத் துணையாக சர்வசீலனெனும் தோழனும் புறப்பட்டான். பற்பல விடங்களிலும் தேடிக் கடைமுடிவில் அரக்கனுறையும் மலைச்சாரலை இருவரும் கிட்டினர்.

அரசிளந்தோன்றல் தனது நண்பனுகிய மந்திரிகுமாரனை ஓர் மரத்தடியிலிருக்கும்படி சொல்லிவிட்டு அவ்வனத்தையாராய்ந்து கொண்டு அரக்கனது குகையைக் கிட்டினுன். அத்தருணம் அரக்கன் வெளிப்போயிருந்தான். ஞானவல்லியோ கண்ணியிற் சிக்குண்ட பறவையைப் போல் மனந் துடித்துத் துக்கித்துக்கொண்டிருந்தாள். அரசிளந்தோன்றல் கிட்டவே அவட்கு ஆனந்தம் பிறந்தது. ஆயினும் ஒரோவழி அரக்கனே உருமாறி வந்தானே வென வச்சங்கொண்டாள். ஓர் அசரீரி அவள் அச்சத்தை மாற்றவே அதிரூபனும் ஞானவல்லியும் ஒருவரையொருவர் இனந்தெரிந்துகொண்டு மட்டுக்கடங்கா வுவகை

யெய்தினர். அரக்கனை யொழிக்கும் வழி நாடிய அதிரூபன் அன்னோனது உயிர் நிலையை யறியவிரும்பினான். ஞானவல்லி சாதுரியமாக வதனை அரக்கனிடந்தெரிந்து வெளிப்படுத்துவதாக வாக்களித்து அரசிளந்தோன்றலைச் சிறிது நேரம் மறைவிருக்கச்சொல்லிக் குகைக்குட் சென்றாள். அரக்கனும் கடிதில் போஜனவகைகளுடன் அவளைக் குறுகினான். ஞானவல்லி அவனிடம் இணக்கங்கொண்டவள் போல் நடித்து இரகசியத்தைக்கிரஹித்துக் கொண்டாள். அரக்கன் நித்திரை கொண்டான். கன்னிகை வெளிப்போந்து அதிரூபனிடம் அரக்கனது உயிர்நிலை சிறிது தூரத்துள்ள தடாகத்தின் நடுவண்மலர்ந்துள்ள செந்தாமரைப்பூவினுள் வண்டுருவமாக வுறைவதாகச் செப்பினள். அரசிளந்தோன்றல் பொருக்கென வெழுந்து மலரைக்கொண்டுவரச் சென்றான். தடாகத்துள் இறங்கவே முதலைகள் மொய்க்க வாரம்பித்தன. ஈசனைப் பிரார்த்தித்து வரம்பெற்று தியானத்தமர்ந்து செந்தாமரைமலர் தானே வந்து கைக்கண் கிட்டவே அதனைக்கொண்டு வேகமாக ஞானவல்லியை யடைந்தான். உடனே அம்மலரை குகைவாசற்படியில் நசுக்கவே உள்ளிருந்த வண்டு இறந்தது ; அரக்கனும் துடிதுடித்து உயிர் துறந்தான்.

பின்னர் அதிரூபன் ஞானவல்லியை யிட்டுக்கொண்டு தனது நண்பனும் கர்வசீலனையும் அழைத்துக்கொண்டு மூவரும் ஹஸ்தினபுரத்தை நாடிப்புறப்பட்டனர். வழியில் ஒரு மரத்தடியில் மூவரும் சிற்றுண்டிகளை அயின்றபோது ஞானவல்லிக்கு நீர் வேட்கை மிகவோங்கி யெழவே அதிரூபனும் கர்வசீலனும் தண்ணீரை நாடி புறப்பட்டனர். கொடும்பாவியாகிய கர்வசீலன்

ஞானவல்லியைக் கண்டதுமுதல் அவள்பால் மோகங் கொண்டு நண்பனை விலைமுடிக்கும் வழியை மனத்துள் நாடி நின்றான். நீர் தேடிப்போன இருவரும் ஒரு கிணற் றைக் கிட்டிய காலை கர்வசீலன் அசதியில் அதிரூபனைக் கிணற்றிற் றள்ளிவிட்டு சோகத்தால் மொத்துண்டவன் போற் பாசாங்குசெய்துகொண்டு ஞானவல்லியைக் கிட்டி அதிரூபனை ஒரு புலி தூக்கிக்கொண்டு போய்விட்டதா கப் பொய்யுரைத்தான். காதலனது மாணதனைத் தாங் கலாற்றாத ஞானவல்லி அக்னிப் பிரவேசஞ் செய்யத் துணிந்தாள். கர்வசீலன் அச்செயலைத் தடுத்துத் தன்னை மணமாலை சூடும்படி வேண்டினான். இவனது வஞ்சகத் தையுணர்ந்த ஞானவல்லி அவனுக்கோர் சிறிதும் இணங் காது அவனை வெகுளி கொண்டு பேசினாள். அவன் அவளை பலாத்காரஞ் செய்து கற்பழிக்க முயன்றபோழ்து தெய்வச் செயலால் ஒரு பலிவந்து திட்டனைக் கௌவிக் கொண்டு மாயமாய்ப் போய்விட்டது.

அதிரூபனோ சில இடையர்களால் கிணற்றைவிட்டு வெளியேறி கர்வசீலன்மேற் கடுங்கோபங்கொண்டு ஞான வல்லி இருக்குமிடத்தை நாடி ஓடிவரும்போழ்து அவள் அக்னிப் பிரவேசமாகப் போவதைக்கண்டு அவளைப் பதைபதைப்புடன் விரைவிற்கிட்டி நெருப்பிற் கிரையாவ தினின்றும் தடுத்து ஆலிங்கனஞ் செய்தான். கர்வசீல னது கதியை அதிரூபன் தெரிந்துகொண்டபின் இருவ ரும் உடன்போந்த இடையர்களோடு ஹஸ்தினபுரத் தரண்மனையைக் கிட்டினர். தனது புத்திரியைத் திரும் பக்கண்ட கீர்த்திசேநமன்னனுக்குப் பிறந்த மகிழ்ச்சியை எவ்வாறுரைப்பது!

நல்ல ஓரையில் ஞானவல்லியையும் மந்திரி புதல்வியாகிய சுயம்பிரபையையும் அதிரூபனுக்கு மணம் முடிப்பித்து மகுடாபிஷேகமுஞ் செய்வித்து மனம்பூரித்து மன்னர்கோமான் துறவில் இச்சைபிறந்து தவஞ்செய்யக் கானகஞ்சென்றான்.

இந்நாடக வாயிலாகப் பெறக்கூடிய உறுதிகள் யாவை?

ஊக்கமுடையார் ஆக்கம் பெறுவர் என்பதும் தெய்வ சகாயத்தை நாடின் மலைபோன்ற இடையூறுகளும் பனி போல விலகும் என்பதும் இந்நாடகத்தால் வெளியாகும்.

அன்றியும் இவ்வினிய நாடகம் 'உற்றார்க்குரியர் பொற்றொடிமகளிர்' எனும் உறுதியை விளக்கமுறக்காட்டிய காப்பியமாகும். உலகினரே யன்றித் தேவரும் கொண்டாடும் கற்பின் திறத்தை அங்கையி னெல்லிக்கனிபோல் இந்நூற்கண் காணலாம்.

ஸ்ரீ. அ. திருமலைக்கொழுந்து,
ஆங்கில ஆசிரியன்,
எட்டயபுரம் ஸம்ஸ்த்தானம்.

நாடகபாத்ரங்கள்

புருஷர்கள்

கீர்த்திஸேநன்—	ஹஸ்திநபுரத்தரசன்.
பர்வதகேது—	ஷையார் மந்த்ரி.
சபலன்—	மகததேசத்தரசன்.
சாந்தசீலன்—	ஷையார் மந்த்ரி.
சரபன்—	குந்தலதேசத்தரசன்.
சௌர்யகேது—	ஷையார் மந்த்ரி.
அதிருபன்—	குந்தலதேசத்திளவரசன் (கதாநாய [கன்).
கர்வசீலன்—	ஷையார் தோழன் (மந்த்ரிகுமாரன்).
விகடன்—	ஹஸ்திநபுரத் தரண்மனே விதூஷ [கன்.
துதர்க்கன்—	ஓர் அரக்கன்.
ராமக்கோன், திம்மக்கோன் —	ஹஸ்திநபுரத்தைச்சார்ந்த ஓர் சிற்றூரில் வசிக்கும் இடையர்கள்.

ஸ்த்ரீகள்

ஞானவல்லி—	ஹஸ்திநபுரத் தரசன்மகள் (கதாநாயகி).
ஸ்வயம்ப்ரபை—	ஷையார் மந்த்ரிகுமார்த்தி (கதாநாயகியின் தோழி).
கமலினி, மீனலோசனி —	தோழிகள்.

பரமேஸ்வரர், இடைச்சி, சேவகர்கள், வள்ளுவர் முதலாயினர்.

நாடக நிகழ்விடம்

பெரும்பான்மை ஹஸ்திநபுரத்திலும், அதற்கடுத்த மலைச் சாரலிலும், சிறுபான்மை மகததேசத்திலும், குந்தலதேசத்திலுமாம்.

கதாஸங்க்ரஹம்

இந்நாடகம் மூன்று அங்கங்களாகப்
பிரிக்கப்பெற்றிருக்கின்றது.

முதல் அங்கம்

முதற்காட்சி—ஹஸ்திநாபுரத்தில் தர்பார்; கீர்த்திஸேநமஹாராஜன் ஸந்தானத்தைப்பற்றி மந்த்ரியிடம் ஆலோசித்து அரசன் தபோவனம் போதல்.

இரண்டாங்காட்சி—தபோவனம்; அரசன் பரமேஸ்வரனை நோக்கித் தவஞ்செய்ய ஈஸ்வரன் ப்ரஸந்நமாய் வரமளித்தல்.

மூன்றுங்காட்சி—சிங்காரவனம்; ஞானவல்லி தோழிமார்சகிதம் விகடனுடன் பூம்பொழிற்புக்கு, அவரவர் தனித்தனி பிரிந்து மலர் கொய்யப்போ யிருந்தபோழ்து, தான் றனியே மலர் கொய்தராநிற்புழி குதர்க்கன் என்ற வோரரக்கன் வந்து, விகடனை யுதைத்துத் தள்ளி, ஞானவல்லியை யபகரித்துப்போகின்றனன். பின்னர், தோழிமார்கள் ஒருங்குகூடி ஞானவல்லியைத் தேடிக்காணுமல் அரசன்பாற் செல்லல்.

நான்காங்காட்சி—தர்பார்; தோழிமார் விகடன் சகிதம் அரசன்பாற் சென்று ஞானவல்லியை ராக்ஷஸ னெடுத்துச் சென்றதாய்த் தெரிவிக்கவே, ராஜன் மூர்ச்சித்து விழல்; பின்னர் மந்த்ரியாற் கீளதெளிந்து,

ஞானவல்லியைக் கண்டுபிடிக்கும் வகையை மந்த்ரியினுலோசனையாற் றெரிந்து, தேசங்கடோறும் பறையறைய வள்ளுவனை விடுத்தல்.

ஐந்தாங்காட்சி—பர்வதகுஹை; ராக்ஷஸன் தன்னை வதுவை செய்துகொள்ளும்படி ஞானவல்லியைக் குறையிரத்தல்.

இரண்டாவது அங்கம்

முதற்காட்சி—மகததேசத்தில் தர்பார்; சபலன் என்ற ஓர் சிற்றரசன் பறையோசையைச் செவியேற்று, மந்த்ரியிடம் சொல்லிக்கொண்டு, ஞானவல்லியைத் தேடிச் செல்லுதல்.

இரண்டாங்காட்சி—பர்வதப்ரதேசம்; சபலன் அரக்கனோடு போர்புரிந்து மடிதல்.

மூன்றாங்காட்சி—குந்தலதேசத்தில் தர்பார்; சரபன் என்ற ராஜன் கொலுவீற்றிருக்கும்போழ்து பறையோசையின் விஷயத்தைத் தெரிந்துகொண்டு அதிரூபன் என்ற இளவரசன், தந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு, தன் றோழனோடு ஞானவல்லியைத் தேடிச் செல்லல்.

நான்காங்காட்சி—பர்வதப்ரதேசம்; அதிரூபன் கர்வசீலனை குஹைக்கு வெளியே நிறுத்திவிட்டு தான் குஹைப்புறமுள்ள உத்யானத்திற் சென்று, ஞானவல்லியைச் சந்தித்துத் தன் வரலாற்றைத் தெரிவித்து, அரக்கனது உயிர்நிலையைத் தெரிந்துரைக்கும்படி கூறி தான் வெளியேகுதல்; பின்னர், அரக்கன் உண்டிவகைகளைக் கொணர்தலும் ஞானவல்லி சற்று இணங்குபவள்போல் நடிக்கவே அரக்கன் தன்னுயிர்நிலையைக் கூறி, குஹையின் ஓரறைக்குள் நித்ரைக்கேகல்; உடனே, அதிரூபன் வந்து அரக்கன துயிர்நிலையை

ஞானவல்லிபாற் றெரிந்துகொண்டு தாமரைத் தடாகத்தை நோக்கிச் செல்லல்.

ஐந்தாங்காட்சி—*தடாகக்கரை; அதிரூபன் ஈஸ்வரனை ப்ரார்த்தித்து, அவரது மந்த்ரோபதேச மஹிமையால், வண்டைத் தாமரைமலருடன் கொணர்தல்.*

ஆறங்காட்சி—*பர்வத குஹை; அரக்கன் நித்ரைசெய்யும் சமயமறிந்து அதிரூபன் வண்டை நசுக்கிக் கொன்றுவிடவே அரக்கன் உயிர் நீத்தல்; க்ஷணமே, ராஜகுமாரன் ஞானவல்லியையும் கர்வசீலனையும் அழைத்துக்கொண்டு ஹஸ்தினுபுரிக்குப் புறப்பட்டேகல்.*

மூன்றுவது அங்கம்

முதற்காட்சி—*இடையர் குடிசை; ராமக்கோன் திம்மக்கோன் என்ற இரண்டு இடையர்கள் பகலுணவைக் கைக்கொண்டு மாடுமேய்க்கப் புறப்படுதல்.*

இரண்டாங்காட்சி—*வனத்தில் மரத்தடி; அதிரூபன், ஞானவல்லி, கர்வசீலன் ஆகிய மூவரும் உணவருந்திக் கொண்டிருக்குங்கால், ஞானவல்லியின் வேண்டுகோளின்மேல், அதிரூபன் தன்றோழனோடு ஜலங்கொண்டுவரக் கிணற்றுக்கேகல்.*

மூன்றங்காட்சி—*கிணற்றோரம்; ராஜகுமாரன் கிணற்றை யெட்டிப் பார்க்கும் சமயம் மந்திரிகுமாரன் ராஜதநயனைக் கிணற்றிற் றள்ளிவிட்டு ஞானவல்லிபாற் செல்லல்.*

நான்காங்காட்சி—*வனத்தில் மரத்தடி; கர்வசீலன் தான் கிணற்றிலிறங்கியபோழ்து அதிரூபனைப் புலி தூக்கிக்கொண்டு போனதாயும், தான் எவ்வளவோ பிரயாசப்பட்டும்அதிரூபனைமீட்கக்கூடாமற் போயிற்றென்றும் ஞானவல்லிபாற் பொய் புகன்று, சோகத்தால்ஞானவல்லி அக்னிப்ரவேசத்துக் காயத்தப்படும் போழ்து,*

கர்வசீலன், தன்னையே மணந்துகொள்ளும்படி பலாத்காரஞ் செய்யப்புகுஞ் சமயத்தில் திடீரென ஓர் வியாக்ரம் வந்து கர்வசீலனை யெடுத்துச்செல்லல். ஞானவல்லி, அக்னிப்ரவேசமாதற்குத் தீ வளர்க்கக் கட்டைகளைச் சேகரித்தல்.

ஐந்தாங்காட்சி—கிணற்றோரம்; இடையர்கள் கிணற்றருகிலுட்கார்ந்து உணவருந்துங்காலை, அதிரூபனது தீனக்குரலைக்கேட்டுக் கிணற்றினின்றும் ராஜகுமாரனை வெளியேற்றி ஞானவல்லியிடம் திம்மக்கோன் அதிரூபனை யழைத்துப்போதல்.

ஆறாங்காட்சி—மரத்தடி ; ஞானவல்லி தீ வளர்த்து அக்னியிற் குதிக்கப்போம் சமயம் அதிரூபன், சற்று தூரத்திலேயே கண்டு, ஓடிவந்து தடுத்து ஒருவர்க்கொருவர் ஆநந்தபரவசர்களாகி எல்லோரும் ஹஸ்திநபுரியை நோக்கிச் செல்லல்.

ஏழாங்காட்சி—ஹஸ்திநபுரத்தில் தர்பார் ; கீர்த்திஸேநன் மகளைக் காணாது விசாரப்பட்டுக்கொண்டிருக்கு மமயம் அதிரூபன் ஞானவல்லியுடன் போந்து சந்தித்து ஒருவர்க்கொருவர் சந்தோஷ மேலீட்டா லானந்தந் துய்த்தபின்னர், கீர்த்திஸேநன் ஞானவல்லியையும் மந்த்ரி குமாரத்தியாகிய ஸ்வயம்ப்ரபையையும் அதிரூபனுக்கு வதுவை செய்வித்து, ஹஸ்திநபுரத்திற் கரசனாக, அதிரூபனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து தான் தவத்துக்கேகல்.

கதாஸங்க்ரஹம் முற்றிற்று.

சுபம்.

உ

கணபதி துணை

ஞானவல்லி

சீர்பெருகு மிளசையம் பதியிலாட்சி
செலுத்தும் வேங்கடேசு ரேட்ட சீமானுய்ந்தே
பார்பெருகுங் கவிவல்லோர் பாவிவாழ்த்தத்
தகும் ஞானவல்லி கதை பண்பாயென்றும்
ஏர்பெறு நன்னுடகமா யியற்றுதற்கே
இளம்பிறைசூ டெம்பெருமா னீன்றசெல்வக்
கார்பெருகு கஜவதனக் கடவுளேநின்
கமலவடி யிணை பணிந்தேன காத்தாள்வாயே.

உ

சிவமயம்

கணபதி துணை

ஞானவல்லி

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—ஹஸ்திஙபுரத்தின் தர்பார்.

காலம்—காலை.

பாத்ரங்கள்—கீர்த்திஸேநன், பர்வதகேது, சேவகன் முதலாயினர்.

கீர்த்திஸேநன்—மந்த்ரீ! இதுகாலபர்யந்தம் அநேகவித தானதர்மங்களைச் செய்தும், நமக்குப்பின் இந்த ராஜ்யத்தைப் பரிபாலிக்க, யாதொரு புத்ர ப்ராப்தியையும் நாம் பெறுதிருப்பது உமக்குத் தெரிந்த விஷயமே. புத்ர ஸந்தானத்தைப் பெறுதற்கு வேறு எவ்வித மார்க்கம் தக்கதோ அதைத் தெரிவித்தால் அவ்விதம் செய்து புத்ரனைப் பெறுவோம்.

பர்வதகேது—மஹாராஜ! ஆம்; வாஸ்தவந்தான். [சற்று யோசித்து] ப்ரபோ! எனக்கு ஒரு யோசனைத்

தென்படுகின்றது; அவ்வண்ணம் நடப்பீர்களாயின் கார்யம் சித்தியாகுமென்று நினைக்கின்றேன்.

கீர்த்தி—அமைச்சரே! அது என்னயோசனை? உடனே தெரிவீப்பீர்.

பர்வத—அரசே! அநேக அரசர்கள் பகவானை த்யானித்துத் தவம்புரிந்து புத்ரபாக்யம் பெற்றூர்களெனப் பெரியோர் புகலக் கேட்டிருக்கின்றேன். அதன்படி மஹாராஜா அவர்களும் நடத்திஞல் புத்ர ஸந்தானத்தை யடைதற்கு யாதொரு ஐயமுமில்லை.

கீர்த்தி—மந்த்ரீ! சந்தோஷம். நீர் கூறியவாறே யான் இதோ கான் சென்று ஈசனை நோக்கி அருந்தவம் புரிந்து ஸந்தானத்தைப் பெற்றுவருகின்றேன். நீர் அதுவரை இந்த ராஜ்யத்தை ஜாக்ரதையாகப் பரிபாலித்து வரவேண்டும். யான் சென்று வருகின்றேன்.

பர்வத—உத்தரவு; நமஸ்கரிக்கின்றேன்.

கீர்த்தி—கல்யாண். [ராஜ்யத்தை மந்த்ரி வசமொப்புவித்து அரசன் தவத்துக்கேகல்.]

முதல் அங்கம்

இரண்டாங் காட்சி

இடம்—தபோவனம்.

காலம்—மாலை.

பாத்ரங்கள்—கீர்த்திஸேநன் பரமசிவன்.

கீர்த்திஸேநன்—

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே! புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேன் மிளிர் கொன்றை யணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுண் மாணிக்கமே!
அன்னே! உன்னை யல்லாலினி யாரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

தேவதேவா! நான் எவ்வளவோ கடுந்தவஞ் செய்தும் ப்ரஸந்ந மாகாதிருக்கின்றீர். இவ்வேழையை இத் தருணம் வந்து காக்காவிடில், இதோ இந்தக் கட்கத்தால், என்னுயிரை மாய்த்துக் கொள்கிறேன். [எனக் கூறிச், சற்றுத் தாமதித்து, உரையினின்றும் வாளையுருவி அரசன் தற்கொலை புரிந்து கொள்ள யத்தனித்தவுடன் பரமசிவன் ப்ரஸந்நமாதல்.]

பரமசிவன்—போதும் நிறுத்தும்; உம்முடைய பக்திக்கு மெச்சி இதோ ப்ராப்தமாகி வரந்தரச் சித்தமாயிருக்கின்றேன்; வேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள்ளும்.

கீர்த்தி—தேதேவா! நமஸ்கரிக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்

விண்ணுலகாள் கின்ற விச்சாதரார்களும் வேதியரும்
புண்ணியரென் றிருபோதும் தொழப்படும் புண்ணியரே,

கண்ணிமையாதன மூன்றுடையீர் நுங்கழல் பணிந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப் பெறுதிரு நீலகண்டம்.

சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!
சுரிகுழற்பணை முலைமடந்தை
பாதியே! பரனே! பால்கொள் வெண்ணீற்றாய்!
பங்கயத்த யனுமாலறியா
நீதியே! செல்வத்திருப் பெருந்துறையி
னிறைமலர்க் குருந்தமேவியசீர்
ஆதியே! யடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே யென்றருளாயே.

திருச்சிற்றம்பலம்.

ப்ரபோ! எனக்குச் சகல பாக்யங்களையும் அருள்புரிந்திருக்கின்றீர்; ஆனால், புத்ரபாக்யம் ஒன்று குறைவாயிருப்பதைப்பற்றி உம்மை நோக்கித் தவம்புரிந்தேன்; கருணைகூர்ந்து ஸந்ததியைப் பெறுமாறு அருள்புரிய வேண்டும். அவ்விதமே எனது மந்த்ரிக்கும் அருள்புரிய வேண்டும் என ப்ரார்த்திக்கிறேன்.

பரம—பக்தசிரோமணீ! இந்த ஜன்மத்தில் உமக்குப் புத்ரனில்லை; ஆயினும், புத்ரியைத் தருகின்றேன். அந்தப் புத்ரியினால் சகல பாக்யங்களையும் பெறக்கடவீர். அவ்விதமே மந்த்ரிக்கும் அருள்புரிந்திருக்கின்றேன்.

கீர்த்தி—தேவா! மஹா பாக்யம்; நமஸ்கரிக்கின்றேன்.

பரம—கல்யாண்.

[பரமசிவன் வரமளித்து அந்தர்த்தானமாகின்றார், அரசன் ராஜ்யத்தை நோக்கிச் செல்கின்றான்.]

முதல் அங்கம்

மூன்றுங் காட்சி

இடம்—உத்யானம்.

காலம்—காலை.

பாத்ரங்கள்.—ஞானவல்லி, ஸ்வயம்ப்ரபை, கமலினி, மீனலோசனி, விகடன், குதர்க்கன்.

ஞானவல்லி—

ராகம்-ப்யாக்; தாளம்-சாபு.

1. நந்தவனத்தி னழகினைப் பார்க்கவே
நாம்சென்று கூடிடுவோம், அங்கு
நாடிமலர் கொய்து சூடிப்
பாடியேநாம் விளையாடிடுவோம்.

2. சுந்தரநங்கை ஸ்வயம்ப்ரபை
கமலினிதோகை மீனலோசனி, அடி
தோழியர்காள் வாரும் சீக்கிரமே
செல்வோம் சோலைதனை நாடியே.

3. இந்தவேளை நல்லவேளையடி நமக்
கின்பமுடன் செல்லுவோம்
என் பின்னே வாருங்கள்
நன்னயமாகவே ஏகுவோம் தோழியர்காள்.

[நந்தவனத்திற்குள் வந்ததும் பாடுதல்.]

ராகம்-தன்யாசி; தாளம்-சாபு.

பல்லவி

இந்த நந்தவனம்போல எங்குங் கண்டதுண்டோ
ஏதென்ன காட்சியடி!

அநுபல்லவி

கந்தமலர்கள் பூத்து கமழுதென்ன சோடி!
காரிகையே யிதற் கிணையேது கூறடி இந்த

சரணம்

மல்லிகை ரோஜா இருவாட்சி பன்னீர் பிச்சி
மருவு சம்பக முல்லை—பார்க்க
மகிழ்ச்சியுடன் மலர்ந்து மணக்குந் திறமைசொல்ல
வல்லமை நமக்கில்லை.

உல்லாஸமாக நாமுமுவந்திம் மலரெடுப்போம்
உன்னதமாக வெழிலோங்கு மாலை தொடுப்போம். (1)

புங்க மாவினங் கமுகெங்கணு மோங்கியுயர்
புன்னை பலா வாழை-மடற் [மை
போதவிழ் மகரந்தந்தூவிப் பரிமளிக்கும் புதியவிளந்தா
மங்குல்கள் தவழ்ந்திட மருவுவளங் கிளர்ந்த
மரக்கிளைகளில் மயிலாடநின்றே வளர்ந்தே—இந்த (2)

அடி தங்காய்! தோழிமார்களே! இந்த நந்தவனத்தி னழகை என்னென்று புகல்வேன்! இதிலிருக்கும் தென்னை, கமுகு, மா, பலா, மாதுளை, நாரத்தை, கொய்யா முதலிய விருக்ஷஜாலங்களும்; குடமல்லிகை, சம்பகம், செந்தாமரை, பிச்சி, இருவாட்சி, ரோஜா முதலிய புஷ்பச்செடிகளும்; மதுவுண்டு ரீங்காரஞ் செய்யும் வண்டினங்களும்; மயில்கள் தம் கலாபங்களை விரித்து ஆடுகின்ற நாட்டியங்களும்; மரக்கிளைகளிலிருந்து குயில்கள் கூவுகின்ற த்வனிகளும் மாந்தரது மனத்திற்கு எவ்வளவு ஆநந்தத்தைத் தருகின்றன. ஆனால், தங்காய் ஸ்வயம்ப்ரபை! இந்தப் புஷ்பவாசனையினாலும், ஆங்காங்கு பக்ஷிஜாதிகள், ஆணும்

பெண்ணும், ஜோடிஜோடியாய்க் கூடிக் குலாவிக்கொண்டிருப்பதைப் பார்ப்பதினாலும் என்மனம் ஏதோ ஒருவிதமான தாபத்தை யடைகின்றது. இந்த இளந் தென்றலுமல்லவா அனல்போல வீசுகின்றது.

ஸ்வயம்ப்ரபை—ஆம்; அக்கா, உன்னைப் போலவே யானும் வருந்துகின்றேன். நமது யௌவனதசையே இதற்குக் காரணம். நமக்கு இதுவரை விவாஹமாயிருந்தால் இவ்வாறு தாபத்தை யடையவேண்டிவராது. இஃதிருக்கட்டும்; நான் உன்னை ஒன்று கேட்கிறேன், அதை நீ ஒளியாமற் சொல்லவேண்டும். பிரியப்படுவாயாயின் சொல்லுகிறேன்.

ஞான—என்னசங்கதி அது?

ஸ்வயம்—இப்போது, உன்மனம் எந்த ராஜகுமாரனைக் காமுற்றிருக்கின்றது? சொல், பார்ப்போம்.

ஞான—எனக்கு யாரைத்தெரியும் சொல்வதற்கு!

ஸ்வயம்—அப்படியானால், யான் சில ராஜகுமாரர்கள் பெயரையும், அவர்களது குணாதிசயங்களையும் வரிசையாய்க் கூறிவருகின்றேன்; அவர்களில் நீ யாரைக் காமுறுகின்றனையோ பார்ப்போம்!

ஞான—சரி, தெரிவிக்கிறதுதானே!

ஸ்வயம்—மகததேசத்தரசன் சபலன் என்பவர்,—

ஞான—போதும் போதும் நிறுத்து! பேரைப்பார்!——சபலன்,——

விகடன்—அம்மணீ, நன்றாய்ச் சொன்னீர்கள்! பேரே சபலமாயிருந்தால் மனம் எப்படி ஸ்திரமாயிருக்கும்? நல்ல ஆசாமியைப் பார்த்துத் தெரிவித்தீர்கள்!

ஸ்வயம்—விகடா! சும்மாயிரு; என்னடா கேலி செய்கின்றாய்!

விகடன்—தங்களுக்குக் கோபமாயிருந்தால் நான் இதோ அப்புறம் செல்கின்றேன். [தனிமொழி] ராஜகுமார்த்தியும் மந்த்ரிகுமார்த்தியும் தங்கள் காதலைப்பற்றிப் பேசிக்கொண்டு உல்லாஸமாயிருக்கும் சமயத்தில் விவாஹமாகாத எனக்கு இங்கென்னவேலை? வெளிச்சென்று என் காதலையும் கமலினியோடு பேசிக்கொள்வேன்.

ஸ்வயம்—அக்கா! குந்தலதேசத்து ராஜபுத்ரர் அதிரூபன் என்பவர் அழகில் மிகச்சிறந்தவர்; குணத்திலும் நிகரற்றவர்.

ஞான—ஆம், வாஸ்தவந்தான்! ஆனல்——

ஸ்வயம்—ஆஹா! அப்படியா! தெரிந்துக்கொண்டேன். ஆனல், தங்களை யான் ஒன்று கேட்டுக்கொள்கின்றேன்; என்பேரில் அபிமான மிருக்கும்பக்ஷத்தில் நான் கேட்டுக்கொள்கிறவண்ணம் நடப்பதாய் வாக்குறுதி செய்தால் சொல்கிறேன்.

ஞான—சரி, அவ்விதம் செய்வதில் யாதொரு தடையுமில்லை; விஷயத்தைக் கூறுவாய்.

ஸ்வயம்—நாமிருவரும் சிறுவயதுமுதல் இதுவரை எவ்வாறு இணைபிரியாது நேசமாயிருந்தோமோ அவ்வாறே நம தாயுள்பர்யந்தமும் நாம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாது நேசமாயிருக்க விரும்புகின்றேன்.

ஞான—மெத்த சந்தோஷம். இதற்காகத்தான என்னை உறுதி கேட்டனை! எனக்கும் இதுவே சம்மதம். ஆகையால், நாம் இருவரும் ஒரே கணவனை மணந்து

மனமொத்து இணைபிரியாது சுகமாக வாழ்ந்திருப் போம்.

ஸ்வயம்—உன்சித்தம் என்பாக்யம்.

ஞான—சரி, போதும்; இவ்விஷயத்தை நிறுத்தி, இந்த நந்தவனத்தில் உல்லாஸமாய்க் காலங்கழிக்க என்ன விளையாட்டு விளையாடலாம்?

ஸ்வயம்—அக்கா ஞானவல்லீ! நாம் தனித்தனியே சென்று இவணுள்ள மலர்களைக் கொய்து மாலைகளாகக் கட்டி, யார் கட்டிய மாலை நன்ருயிருக்கிற தென்று பார்ப்போம்.—நீ என்ன சொல்கின்ருய் கமலினீ?

கமலினி—ஆம் அம்மா! அவ்விதமே செய்ய எனக்கும் தோற்றுகின்றது. [மீனலோசனியைப் பார்த்து] மீன லோசனீ! நீ என்ன சொல்கின்ருய்?

மீனலோசனி—நீங்களெல்லோரும் எவ்விதம் சொல்கின் றீர்களோ அவ்விதமே எனக்கும் சம்மதம்.

ஞான—சரி; நீங்களெல்லோரும் ஒரேவிதமாகச் சொல்வ தால் அவ்விதமே செய்வோம். தங்காய் ஸ்வயம் ப்ரபை! நீ இந்த மார்க்கமாகச் சென்று மலர்களைக் கொய்து மாலை தொடுத்துக் கொண்டுவரக்கடவாய். கமலினீ! நீ இதோ தெரிகின்ற பாதை மார்க்க மாகச்சென்று அவள் செய்கிறபடி செய்துவா. அடி மீனலோசனீ! அவர்களுக்கு நான் இப்போதிட்ட கட்டளை உனக்குத் தெரியுமல்லவா! அவ்விதமே, நீயும், அதோ தெரிகின்ற மார்க்கமாகச் சென்று, செய்துவருவாய். நான் இங்கு ஒரு பக்கத்தில் புஷ் பங்களைக்கொய்து மாலை கட்டிக்கொண்டிருக்கிறேன்.

விகடா! நீ இங்குதானே நில்; நான் சற்று அப்புறஞ்சென்று மலர் கொய்துவருகிறேன்; ஜாக்ரதை!

விகடன்—ஆம் அம்மா! நானும் பூக்களைப்பறித்து மாலை கட்டிக்கொண்டு வருகிறேன்; என் மாலை கோணலாகத்தானிருக்கும்! அதோ அந்தக் கமலினியின் கழுத்திற்போட்டு வேடிக்கைப் பார்க்கிறேன். அஹஹா! ஹா!! அந்தாமார்க்கத்திற் பூப்பறித்து மாலை கட்ட இதோ போகின்றேன்! எனக்கும் உத்தரவாகட்டும்.

ஞான—ஆம்! ஆம்!! ஆகாயத்திற் பூப்பறித்து மாலை கட்டி எவ்விதங் கொண்டுவரப்போகின்றாய்!

விகடன்—கொண்டுவருகிறேனா இல்லையா பாருங்கள் என் சமத்தை! இதோ கொண்டுவரப் போகின்றேன்! இஹிஹீ! ஹீ !!

[விகடன் கூறியதைக்கேட்டு எல்லோரும் நகைத்துக்கொண்டு, ராஜபுத்ரி அவரவர்களுக்குக் குறிப்பிட்ட மார்க்கமாகச் செல்கின்றனர்; ஞானவல்லி விகடனை நிறுத்திவிட்டு, தானப்புறஞ்சென்று மலர் பறித்துக்கொண்டிருக்குமமயம், விகடன் மலர்கொய்ய ஆகாயத்திற் கிளம்பிக் கிளம்பிப் பார்க்கும்போது, ஓராக்கன் விகடன்மேற் பாய்கின்றனன்.]

விகடன்—இதென்னடா! பூப்பறிக்க ஆகாயத்திற் கிளம்பும்போது ஏதோ ஒரு பெரிய உருவம் என்மேல் வந்து விழுகிறது.—யாரடா நீ?

குதர்க்கன்—நீயாரடா நரப்பயலே? உன்பேரென்ன? இங்கு

எங்கேயடா வந்தாய்? உன்னை யிப்போதே எடுத்து விழுங்கிவிடுவேன்.

விகடன்—அடே அப்பா! எத்தனைப் பெரிய உருவமடா கன்னங்கறேலென்று! பார்க்கப் பயமா யிருக்கின்றதே!—[அரக்கனை நோக்கி] விழுங்குகிறவனைப்பார்! ஓடிப்போ பயலே; இல்லாவிட்டால், இப்போதே நான் உன்னைப் பல்லாற் கடித்து மென்று தின்றுவிடுவேன். ராஜகன்னிகை தனித்து மலர்கொய்து கொண்டிருக்குமிடத்தில் உனக்கென்னடா வேலை? யாரடா நீ? இவ்விடத்திற்கு உன்னை யாரடா வர விட்டது? செல் அப்புறம்! நின்றால், இதோ என் ஜோட்டாலடித்து விரட்டிவிடுவேன்! போடா சீக்கிரம். [எனக்கூறி தன் கால்களைத் தடவிப்பார்த்து] என்னடா காலில் ஜோட்டையுங் காணோமே!

குதர்க்கன்—ஓஹோ! அப்படியா சமாச்சாரம்! இவன் வார்த்தையால் ராஜகன்னிகை இங்கிருப்பதாகத் தெரியவருகின்றது; உள்ளே போய்ப்பார்ப்போம்.

[அரக்கன் உட்செல்கின்றான்.]

விகடன்—அடே! உள்ளே போகாதே. நான் உன்னை உள்ளே விடமாட்டேன்.—போடா வெளியே.

[தடுத்தல்.]

குதர்க்கன்—நீ என்னடா சொல்வது! என்னிஷ்டம்.

[எனக்கூறி அரக்கன் விகடனைக் காலாற் றள்ளவே விகடன் மூர்ச்சித்து விழுகிறான். ராக்ஷஸன் சென்று ஞானவல்லியைப் பார்க்கின்றான்.]

ஞானவல்லி—ஓஹோ! இதென்ன இது? நான் மலர்

பறித்துக்கொண் டிருக்குங்கால் இங்கு ஏதோ ஒரு உருவம் தோன்றுகின்றதே! பெரிய ஆக்ருதியா யிருக்கின்றது; எனக்குப் பயமாயிருக்கின்றதே! இவனை யார் இங்கு வரவிட்டது? யாரடா அங்கே! அடே, விகடா! அடி, தங்காய் ஸ்வயம்ப்ரபை! கம லினீ! மீனலோசனீ! எல்லோரும் சீக்கிரம் வாருங் களேன். அய்யோ! நான் தனியே யிருக்கின்றேனே! ஒருவரும் துணைக்கு வரக்காணோமே! ஆ! என் செய்வேன்?

குதர்க்கன்—இவளைப்பார்த்தால் எவ்வளவோ அழகாயி ருக்கின்றாள். நாம் இந்தக்ஷணமே, நாம் வசிக்கும் மலைக்குகைக்கு இவளை யெடுத்துச்சென்று விவா ஹஞ்செய்து கொள்ளவேண்டும்; தாமதிக்கலாகாது.

[எனச் சொல்லிக்கொண்டு ஞானவல்லி யைச் சமீபித்தனன்.]

ஞான—ஆ! ஜகதீசா! இக்கதிக்கா என்னை யாளாக்கினை! திக்கற்ற எனக்கு நீயே துணை. ஹா! தெய்வமே!

[ஞானவல்லி மூர்ச்சித்து வீழ்கின்றனள். அரக்கன் ஞானவல்லியைத் தூக்கிச் செல்கின்றனன்.]

ஸ்வயம்ப்ரபை—[தனிமொழி] மாலை கட்டிக்கொண்டு குறி த்தவிடத்திற்கு வந்துவிட்டேன். என்னுடைய மாலை அவர்கள் மாலைகளைப்பார்க்கிலும் நன்றாகத்தா னிருக்கும்; நான்றான் ஜயிப்பேன். [விகடன் படுத்தி ருப்பதை யுற்றுப்பார்த்து] இதென்ன? விகடன் படுத் திருக்கின்றான்! ஆகாயத்திற் பூப்பறிக்கப்போனவன் ஆகாயத்தினின்றுங் கீழே விழுந்து மூர்ச்சித்துக்

கிடக்கிருன் போலும். [அருகிற்சென்று களை தெளி விக்கின்றனள். விகடன் எழுந்திருக்கின்றனன்.]

விகடன்—அடே அப்பா! போய்விட்டானு ராக்ஷஸன்? போதும் போதும்; நந்தவனத்திற்கு வந்ததும் போதும், பூப்பறித்ததும் போதும், உதைபட்டதும் போதும். [கை கால்களை யுதறிக்கொண்டு] கைகால்க ளெல்லாம் நோகின்றனவே!

ஸ்வயம்—விகடா! இங்கு யார் வந்தது? யாராலடிபட் டாய்? இவண் வரக்கூடியவனு மிருக்கின்ருனு! ஆச் சர்யமா யிருக்கின்றது. உடனே தெரிவிப்பாய்.

விகடன்—அம்மா! வந்தவன் மனிதனல்லன்; பெரிய உரு வத்துடன் ஒரு ராக்ஷஸன் வந்தான். 'யாரிருக் கிறது' என்று விசாரித்து 'உள்ளே போகலாமா?' என்று கேட்டான். நான் 'போகக்கூடாது' என்று சொன்னேன். என்னை அவன் உதைத்துத் தள்ளி விட்டான். நான் மூர்ச்சையாய் விட்டேன். உங்க ளுக் கெல்லாம் அடி உதை யில்லையோ? நீங்கள் அதிர்ஷ்ட சாலிகள் தான்!

ஸ்வயம்—ஆ! அப்படியா சமாச்சாரம்! ராக்ஷஸனு வந் தான்! நான் பார்க்கவில்லையே! இத்தோட்டத்தில் எங்கேனு மிருக்கிருனு! [என்று இங்கு மங்குஞ் சுற் றிப்பார்த்து] ராஜகுமார்த்தியையும் மற்றவர்களையும் தேடிச் சீக்கிரம் அழைத்துவா. இனி நாமிங்கிருக்க லாகாது.

[விகடன் ராக்ஷஸனுக்குப் பயந்து இங்கு மங்குந் திரும்பிப் பார்த்துக் கொண் டே தேடிச் செல்கின்றனன்.]

விகடன்—அம்மா! ராஜகுமார்த்தி காணப்படவில்லையே! ராக்ஷஸனுந் தென்படவில்லையே! மற்றவர்கள் அதோ வருகின்றார்கள்.

ஸ்வயம்—கமலினீ! மீனலோசனீ! இவ்விடம் ஒரு ராக்ஷஸன் வந்து நமது விகடனை அடித்துத் தள்ளி விட்டதாகவும், ராஜகுமார்த்தி காணப்படாதிருப்பதாகவும் விகடன் மூலமாய்த் தெரிந்தேன். நீங்கள் அக்கொடிய அரக்கன் கையினின்றும் எவ்விதம் தப்பி வந்தீர்கள்?

கமலினி—அம்மா! எங்களுக்கு ஒன்றுந் தெரியாதே! ராக்ஷஸன் வந்ததாக இப்போது நீங்கள் சொல்லத்தான் தெரியும்.ராஜகுமார்த்தியைத் தோட்ட மெங்கணும் நன்றாய்த் தேடிப்பார்த்தீர்களா? வாருங்கள் தேடிப்பார்ப்போம். [எல்லோரும் தேடிப் பார்த்து ஞானவல்லியைக் காணாது விசனித்தல்.]

ஸ்வயம்—ஆமாம். சரிதான்; சகிகளே! ராஜகுமார்த்தி காணப்படாதிருப்பதையும், விகடன் கூறிய வார்த்தைகளையும் யோசித்து நோக்குங்கால், ராஜபுத்ரியை ராக்ஷஸன் தான் தூக்கிச் சென்றிருக்க வேண்டும். இனி நாம் இவ்விடம் அரைக் கணமும் தாமதிக்கப் படாது. அதிவிரைவிற் சென்று மஹாராஜா அவர்களிடம் தெரிவிப்போம்; வாருங்கள் சீக்கிரம்.

[எல்லோரும் அலங்கோலத்துடனும் துக்கத்துடனும் அரண்மனைக் கேகல்.]

முதல் அங்கம்

நான்காங் காட்சி

இடம்—*தர்பார்.*

காலம்—*பிற்பகல்.*

பாத்ரங்கள்—*கீர்த்திஸேநன், பர்வதகேது, ஸ்வயம் ப்ரபை, தோழிமார்கள், விகடன், வள்ளுவன்.*

கீர்த்திஸேநன்—*மந்த்ரீ!* நாம் ஆரண்யஞ் சென்று தவமியற்றி, புத்ரனில்லாவிடினும், ஈசனருளால் புத்ரிகளையாவது அடைந்தது மெத்த சந்தோஷமே. இப்பொழுது, அவர்களுக்கோ தக்க வயது வந்துவிட்டது. நம் செல்வக்குழந்தைகள் இப்போது கன்னிமாடத்தில் வசித்துவருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் விவாஹ மாகாதிருப்பதைப்பற்றி மிகக் கவலையடைகின்றேன். அதிவிரைவில் தக்க வரன்களைத் தேடி விவாஹஞ் செய்து பார்க்க விரும்புகின்றேன். அவர்களுக்குத் தக்க ராஜபுத்ரர்களின் படங்களைத் தருவிப்பீர்.

பர்வதகேது—உத்தரவு; இதோ அதற்குவேண்டிய முயற்சிகளைச் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

[ஸ்வயம்ப்ரபை, தோழிமார் முதலிய விகடனுதியரோடு துக்க முகத்துடன் சபைக்கு வருதல்.]

ஸ்வயம் ப்ரபை—*மஹாராஜா!* இன்று காலை, யானும் ஞானவல்லியம்மாளும், கமலினியும், மீனலோசனியும், விகடனும் உல்லாஸமாய்க் காலங்கழிக்க நந்த

வனத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு, நாங்கள் தனித்தனியே பிரிந்து புஷ்பம் பறித்து விளையாடிக்கொண்டிருக்கும்போது, யாரோ ஒரு ராக்ஷஸன் வந்து விகடனையடித்து மூர்ச்சையாக்கிவிட்டு, ஞானவல்லி யம்மாளைத் திடீரென்று தூக்கிக்கொண்டு போய்விட்டான். எங்களுக்கு மிகவும் துக்கமாயிருக்கின்றது. ஞானவல்லியைப் பிரிந்து எவ்வாறு யாங்கள் மனந்துணிந்திருப்போம்?

கீர்த்தி—ஹா! என்ன? என்ன? என் புதல்வியையா அரக்கனெடுத்துக்கொண்டு போய்விட்டான்? அய்யோ! நான் இனி என்ன செய்வேன்? ஹா தெய்வமே! [என்று ப்ரலாபித்துக்கொண்டு அரசன் மூர்ச்சித்து விழும்போது மந்த்ரி பிடித்துக்கொள்கிறான்.]

பர்வத—[தனிமொழி] அரசரோ மூர்ச்சித்துவிட்டார்! புத்ரியின் பிரிவாற்றாமையால் பூபதி உயிர் துறந்தாலுந் துறப்பர். ஆகையால் மன்னவரைக் காக்கும்பொருட்டு, ஞானவல்லியம்மாளைத் தேடியழைத்து வருதற்கான ஏற்பாடு செய்வதே நமது கடமை. நாமும் கூட விசாரப்படுவதிற் பயனில்லை. முன்னர், அரசரது மூர்ச்சையைத் தெளிவிப்போம்.

[சைத்யோபசாரங்களால் மூர்ச்சை தெளிவிக்கவே கீர்த்திஸேநன் களைதீர்ந்தெழுந்திருத்தல்.]

கீர்த்தி—ஹா! ஞானவல்லீ! எங்குற்றனையோ? அரக்கனெடுத்துப்போகும்பொழுது எவ்வாறு பதைத்தனையோ? என்மனம் துடிக்கின்றதே! அய்யோ! இனி நான் என் செய்வேன்? கண்மணீ! இதற்காகத்தானு

அருந்தவமியற்றி உன்னைப் பெற்றேன்! புத்ரனில்லாவிடினும் புத்ரியாகிய உன்னைப்பார்த்தேனும் மனமகிழ்ந்திருந்தேனே! இப்பொழுது என்னை இத்துயரத்திற் காளாக்கிவிட்டு அரக்கன் கையிற் சிக்குண்டனையே? ஹா குழந்தாய்! எவ்விதம் மனக்துணிந்து உயிர் வாழ்வேன்? இனி எப்போது உன்னைக் காண்பேன்? எவ்வாறு ஸஹிப்பேன்? ஹா! எனதருஞ் செல்வமே! அக்கொடிய அரக்கன் எவ்வாறு உன்னை ஹிம்ஸிக்கின்றானோ? நீ எப்படி பரிதபிக்கின்றாயோ?

பர்வத—மஹாராஜ! அதைர்யப்படவேண்டாம்; நான் வேண்டிய முயற்சிகளைச் செய்து தங்கள் புத்ரியை அதிவிரைவில் தருவித்துத் தருகின்றேன். துயரப்படாதீர்கள். கொஞ்சம் தைர்யத்தை வஹித்திருங்கள்.

கீர்த்தி—எவ்வித முயற்சியால் எனதருந்தவப் புதல்வி சீக்கிரம் கிடைப்பள்?

பர்வத—மஹாராஜ! தங்கள் குமார்த்தியை அரக்கனெடுத்துச் சென்றனனென்றும், அக்கொடிய அரக்கனைக் கொன்று தங்கள் புத்ரியை மீட்டுவருவார்க்கு அன்னவளை மணஞ்செய்விப்பதோடு இவ்விராஜ்யத்திற்காசனுகமகுடாபிஷேகமுஞ்செய்விக்கப்படுமென்றும் 56 தேசங்களிலும் பறையறைவித்தால், யாரேனும் ராஜ குமாரன், ராஜ்யத்திற்கும் பெண்ணிற்கும் ஆசைப்பட்டு, ராஜபுத்ரியைத் தேடிச்சென்று அரக்கனைக் கொன்று, ஞானவல்லியை அழைத்து வருவான். இதுவே தக்க உபாயமென எனக்குத்

தோன்றுகின்றது. ஆஜ்ஞையை எதிர்பார்க்கிறேன்.

கீர்த்தி—மந்த்ரீ! நீர் கூறியது தக்க உபாயமே! அவ்வாறே செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யக்கடவீர்.

பர்வத—யாரடா சேவகன்! நீ அதிசீக்கிரம் போய் மஹாராஜாவிடம் நாம் தெரிவித்த விஷயத்தை வள்ளுவனிடம் சொல்லி ஐம்பத்தாறு தேசங்களிலும் பறையறைந்து வரும்படிச் செய்.

சேவகன்—ப்ரபோ! உத்தரவு.

[சேவகன் வள்ளுவர்களிடம் ராஜாஜ்ஞையைத் தெரிவிக்கவே வள்ளுவர் பறைசாற்ற ஐம்பத்தாறு தேசங்களுக்கும் செல்கின்றனர்.]

முதல் அங்கம்

ஐந்தாங்காட்சி

இடம்—பர்வதகுஹை.

காலம்—மாலை.

பாத்ரங்கள்—குதர்க்கன், ஞானவல்லி.

குதர்க்கன்—அடி பெண்ணே! நான் எவ்வளவோ பிரயாசப்பட்டு இவ்விடத்திற்கு உன்னை யெடுத்து வந்தேன். என் பெயர் குதர்க்கன் என்று சொல்வார்கள். யுத்தத்தில் ஒருவராலும் என்னை வெல்ல முடியாது. [புஜத்தைத் தட்டிக்கொண்டு] நான் மஹா பல சாலி. உனக்கு எது வேண்டுமோ அதை

வருவித்துத் தர என்னால் முடியும். எந்த சமயத்தில் எந்த விதமான ஸௌந்தர்ய ரூபம் எடுக்க வேண்டு மானாலும் அவ்விதரூப மெடுக்க எனக்கு மாயாசக்தியுண்டு. இப்போது நானிருக்கும் இந்த கோர ரூபத்தைக் கண்டு பீதியடையாதே. என்னை மணந்துகொள். குபேரன் பட்டணத்தை அடியோடு பெயர்த்துவந்து இங்கே வைக்கச் சொன்னாலும் உடனே அவ்விதம் செய்ய எனக்கு வல்லமையுண்டு. இந்த்ர லோகத்துள்ள கற்பகத் தருவை விரும்பினாலும், உடனே வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்து தருவேன். உனக்கு வேண்டிய விதம் விதமான ஆடை யாபரணங்கள் இவ்விடத்தில் ஏராளமாயிருக்கின்றன. உனக்கு யாதொரு குறையுமிங்கில்லை; நீ சந்தோஷமாயிரு; கவலைப் படாதே.

ஞானவல்லி—[தனிமொழி] ஓ ஹோ! நாம் இந்த சமயம் அரக்கன் கையிலல்லவா சிக்கிக் கொண்டிருக்கிறோம்! என் செய்வோம்? எவ்வாறு தப்புவது? எவ்வித ஞாயத்தைக் கூறினாலும் கேட்க மாட்டான் போலிருக்கிறதே! இவனோ காமபாதையால் தன்னை விவாகஞ் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறான்—நன்றாயிருக்கின்றது! மனத்திற்கு ரம்யமில்லாத, இந்த கோரரூபத்தோடுங் கூடிய, ராக்ஷஸனை யாமணப்பது? நாமோ மானிட ஜன்மம்; மானிட ஜன்மத்திற்கும் ராக்ஷஸ ஜன்மத்திற்கும் எவ்வாறு பொருத்த மேற்படும்? இது ஒருக்காலும் நடவாத கார்யம். [சற்றுயோசித்து] இப்போது நாம் இவனோடு

முராது ஏதேனும் ஓர் ஸாமோபாயத்தாற்றான் தப்பித்துக் கொள்ள வேண்டும். [அரக்கனை நோக்கி வெளிப்படையாய்] அய்யா! எனக்குத் தங்களைத்தவிர வேறு கதிகிடையாது. பெற்றோர்களை விட்டுப்பிரிந்த காரணத்தால் என் மனம் இப்போது ஏதோ ஒரு வித பீதியடைந்திருக்கின்றது; மனவமைதி யேற்படவில்லை; சிறிது காலத்துக்குள் சமாதானமாய் விடும்; அதன் பின்னர் தங்கள் மனம்போல் நடந்து கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன். தங்களை விட்டு எங்கே நான் போகமுடியும்! கிணற்றினீரை வெள்ளங் கொண்டு போகுமா! சற்று பொறுத்திருங்கள்.

குதர்க்கன்—[தனிமொழி] கூண்டிலகப்பட்ட பக்ஷி எவ்வாறு தப்பமுடியாதோ அவ்வாறே நம் கையிற் சிக்குண்ட இப்பெண் எங்கே தப்பிக்கொள்ளப்போகின்றாள்! ஒருநாளும் முடியாது. இவள் இப்பொழுது மிகவும் பயந்திருக்கிறாள். ஆதலால், நம்மை விவாஹஞ் செய்துகொள்ளும்படி இவளைத் தொந்தரவு செய்யலாகாது; இவள் மனம்போலச் சற்று விட்டுப் பிடிப்போம். [வெளிப்படையாய்] பெண்ணே! நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம்; மனதிற் கவலைப்படாதே; பயமின்றிச் சந்தோஷமாக இந்தக் குஹையில் வசித்துக்கொண்டிரு. விநோதமாய்க் காலங்கழிக்க உனக்கு வேண்டிய விளையாட்டுக் கருவிகளும், பக்ஷிஜாதிகளும், லதாக்ரஹங்களும், பூஞ்சோலைகளும், சிற்றாறுகளும், மலையருவிகளும், பளிங்குமா மண்டபங்களும் இருக்கின்றன. உல்லாஸமா யுலாவிக் காலங்கழிப்பாய். நான், உனக்கு

வேண்டிய, ஆகாரவகைகளைச் சேகரித்துக் கொண்டு வரப்போகின்றேன்.

[செல்கின்றனன்.]

ஞான—அப்பா! சனியொழிந்தது; ஆயினும் இவன் கையினின்றும் வெகுசீக்கிரம் தப்பித்துக்கொள்ள உபாயந் தேடவேண்டும். இருக்கட்டும். இந்தத் தோட்ட முழுதையும் சுற்றிப் பார்த்துவருவோம்.

இரண்டாவது அங்கம்

முதற்காட்சி

இடம்— மகததேசத்து தர்பார்.

காலம்—காலை.

பாத்ரங்கள்—சபலன், சாந்தசீலன், வள்ளுவன் முதலாயினர்.

[வள்ளுவன் மகததேசத்து ராஜவீதியில் பறையறைதல்]

வள்ளுவன்—இதனால் சகலர்க்கும் அறிவிப்பது யாதெனில்; ஹஸ்தினபுரத்தைப் பரிபாலிக்கப்பட்ட ராஜாதிராஜ ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட ராஜ உத்தண்ட கீர்த்திஸேந மஹாராஜா அவர்கள் அருந்தவப் புதல்வியான ஞானவல்லியம்மாள், தன் தோழிமார்களுடன் உத்யானத்தில் புஷ்பம்பறித்து உல்லாஸமாக விளையாடிக்கொண்டிருக்குங்கால், ஓராக்கன்வந்து எங்கள் ராஜபுத்ரியைத் திடீரென்று தூக்கிக்கொண்டு போய்விட்டான். யாராவது அவ்வாக்கனைக்கொன்று ராஜகுமார்த்தியை மீட்டுக்கொண்டு வந்தால் அன்னவற்கு ஞானவல்லி யம்மாளை மணஞ் செய்விப்பதுடன் ஹஸ்தினபுரத்திற்கு அரசனாக மகுடாபிஷேகமுஞ் செய்விப்பதாக எங்கள் மஹாராஜா அவர்கள் ஆஜ்ஞை செய்திருக்கின்றனர்.

சபலன்—மந்த்ரீ! ஏதோ வள்ளுவன் பறைசாற்று மோசைக் கேட்கப்படுகின்றது; யாதென விசாரிப்பாய்.

சாந்தசீலன்—மஹாராஜா! உத்தரவு. [சேவகனை நோக்கி]

யாரடா சேவகன்! நீபோய்ப் பறைசாற்றும் வள்ளுவனை அழைத்து வா.

சேவகன்—ப்ரபோ! உத்தரவு. [சேவகன் சென்று வள்ளுவனை யழைத்துவந்து] இதோ வள்ளுவன் வந்துவிட்டான்.

சாந்தசீலன்—யாரடா வள்ளுவன்! பறையறையும் விஷயம் யாது? ஸவிஸ்தாரமாகக் கூறுவாய்.

வள்ளுவன்—சாமீ! கும்புடுரேன். மஹாராஜா! நானிருப்பது ஹஸ்தினபுரம். எங்கள் மஹாராஜா அவர்களின் புதல்வியாகிய ஞானவல்லி யம்மாள் ஒருநாட் காலையில் பூங்காவில் பூப்பறித்து விளையாடிக்கொண்டிருக்கும்போது அந்தம்மாளை ராக்ஷஸன் ஒருவன் வந்து தூக்கிக்கொண்டுபோய்விட்டான். யாராவது அந்தம்மாளைத் தேடியழைத்து வந்தால் அவர்க்கு ராஜா மகளைக் கல்யாணஞ் செய்துகொடுப்பதோடு ஹஸ்தினபுரத்துக்கு அரசனாக மகுடமுஞ் சூட்டுவிப்பதாக எங்கள் மஹாராஜா அவர்கள் உத்தரவு செய்திருக்கிறார்கள். சாமீ!

சபலன்—மந்த்ரீ! கீர்த்திஸேந மஹாராஜாவின் உத்தரவின் ப்ரகாரம் நான் இப்போதே சென்று, அவ்வரக்கனைக் கொன்று, ஞானவல்லியை மீட்டுவந்து அன்னவளை மணந்து ஹஸ்தினபுரத்தையும் பெற்று வருகிறேன். அதுவரை ஜாக்ரதையாக ராஜ்யத்தைப் பார்த்துக்கொள்.

சாந்த—அரசே! அரக்கனைக் கொல்வது சுலபமான கார்யமன்று. அரக்கர்கள் மாயையில் வல்லவர்கள்: மிகவும் ஜாக்ரதையாக யுத்தஞ் செய்யவேண்டும்.

மனிதரைவிட ராக்ஷஸர்கள் எத்தனையோ மடங்கு பலசாலிகள். ஏதேனும் தக்க உபாயத்தாற்றான் ஜயிக்கவேண்டும். பலத்தாற் கொல்லமுடியாது.

சபலன்—எனது புஜபல பாராக்ரமத்திற்கு அவ்வரக்கன் எம்மாத்திரமென்று எண்ணினாய்! என்னுடைய ஒரே முஷ்டியினாற் குத்திக் கீழே தள்ளிக் கொன்று விட்டு, கார்யசித்தியோடு வருகிறேனா இல்லையா பார்! நான் போய்வருகின்றேன்.

சாந்த.—ஆயினும் நானுரைத்தது ஞாபகத்திலிருக்கட்டும். மஹா ராஜாவின் சித்தம். நமஸ்கரிக்கின்றேன். [தனிமொழி] என்னமோ எனது ஆலோசனையைச் செவியேற்காது பெண்ணாசையாற் போகின்றார். இவர் கதியென்னாமோ! தலைவிதியை யாராற்றள்ள முடியும்; வருவன வந்தே தீரும். ஈசனே! நீர்தான் எமதரசனைக் காக்கவேண்டும்.

இரண்டாவது அங்கம்

இரண்டாங் காட்சி

இடம்—பர்வதப்ரதேசம்.

காலம்—மாலை.

பாத்ரங்கள்—குதர்க்கன், சபலன்.

சபலன்—அநேக விடங்களிற் சென்று ஞானவல்லியைத் தேடிப்பார்த்தும் அகப்படவில்லையே! என் செய்வது? ஒரு சமயம், இதோ தெரிகின்ற பர்வத

குஹைக்குள் இருந்தாலும் இருக்கலாம். எதற்கும் போய்ப்பார்ப்போம். [குஹையைச் சமீபிக்கின்றனன்.]

குதர்க்கன்—[திடீரென வெழுந்து] இதேது ஒருநாளுமில்லாத நரவாடை வெளியேயிருந்து வருகின்றது! [இங்குமங்குஞ்சுற்றி நாசியால் வாசனைப்பிடித்து வெளியிலேறிட்டுப்பார்த்து] அதோ ஒரு நரன் வருகின்றான்; அருகிற்சென்று யாரென விசாரிப்போம். [வெளியே வந்து] யாரடா நீ? நான் வசிக்கு மிடத்திற்கு யாதொரு பயமுமின்றி வரப்பட்ட நரனும் ஒருவனிருக்கின்றானா! என்ன தைர்யமடா உனக்கு! உன் பேரென்னடா? வலைக்குள்ளகப்பட்ட மிருகம்போல் எங்கேயடா வந்தாய்? உயிர் தப்பவேண்டுமானால் சீக்கிரம் ஓடிப்போ; இல்லாவிட்டால், இப்போதே உன்னை யெடுத்து விழுங்கிவிடுவேன்.

சபலன்—அடே ராக்ஷஸப்பதரே! என்னடா தாறுமாறுயுளருகின்றாய்! நீதானா ராஜகன்னிகையை எடுத்து வந்தவன்? நீ இன்னும் கொஞ்சகாலம் உயிர்பிழைத்திருக்க வேண்டுமானால், இப்பொழுதே, ராஜபுத்ரியை என்முன் கொண்டுவந்துவிடு; இல்லையானால், இதோ இந்த பாணத்திற்கு நீ இரையாவாய்.

குதர்க்கன்.—ஸஹபாஷ்! நன்றாய்ச் சொன்னாயடா எலி பூனையை வெருட்டினாற்போல்; ஹ ஹ ஹா! ஓர் நரனும் என்போன்ற அரக்கன்முன் இவ்வளவு தைர்யத்துடன் வீரம் பேசவு மிருக்கின்றானா! ஏதோ உன்விதி முடிந்ததனாற்றான் என்முன் இவ்வளவு துடுக்காகப் பேசினாய். அடே நரப்பதரே! இதோ

இந்த ஒரே அறையினுல் உன்னைக்கொன்று வீழ்த்தி விடுகின்றேன்.

[எனக்கூறி, அரக்கன் சபலன் கையிலிருந்த வில்லையும் பாணத்தையும் பிடுங்கி ஒடித்தெறிந்துவிட்டு, அன்னவனை ஓரறை யறைந்து கொன்று கீழே வீழ்த்தி விடுகிருன்.]

இரண்டாவது அங்கம்

மூன்ருங்காட்சி

இடம்—குந்தலதேசத்து தர்பார்.

காலம்—மாலை.

பாத்ரங்கள்—சரபன், சௌர்யகேது, அதிரூபன், சர்வசீலன், வள்ளுவன் முதலாயினர்.

சரபன்—மந்த்ரீ! நமது ஹஜாரவாயிலின்கண் ஏதோ பறையோசை கேட்கின்றது; அது யாதென வறிந்து தெரிவிப்பாய்.

சௌர்யகேது—யாரடா சேவகன்! நீ சென்று பறையறைபவனைச் சீக்கிரம் அழைத்துவா.

சேவகன்—ப்ரபோ! உத்தரவு. [சேவகன் போ யழைத்து வந்து] இதோ வள்ளுவன் வந்திருக்கின்ருன்.

வள்ளுவன்—சாமீ! மாராசா! கும்புடுரேன்.

சௌர்யகேது—அடே! நீயார்? எந்தத் தேசம்? பறையறைவதின் விஷயமென்ன? விவரமாகத் தெரிவிப்பாய்.

வள்ளுவன்—மாராசா! அடிமை யிருப்பது ஹஸ்திஞ புரம். எங்கள் மஹாராஜாவின் அருந்தவப் புதல்வி யாகிய ஞானவல்லியம்மாள் ஒருநாள் பூந்தோட்டத் திற்கு விஜயஞ்செய்து, புஷ்பம் பறித்து, உல்லா ஸமாகக் காலங்கழித்துக் கொண்டிருக்கும் சமயம், திடீரென யாரோ அரக்கன் ஒருவன் வந்து எங்கள் ராஜபுத்ரியை ஆகாயமார்க்கமாக எடுத்துப்போய் விட்டான். யாராவது, அவ்வரக்கனேடு போர்புரிந்து அவனைக் கொன்று, ராஜபுத்ரியை அழைத்துக் கொண்டுவந்தால் அன்னவர்க்கு எங்கள் மன்னர் மகளை மணஞ் செய்து தருவதுடன் ஹஸ்திஞபுர ராஜ்யத்தையும் தருவதாய் எங்கள் ராஜாதிராஜன் சகலமான பேர்க்கும் பறைசாற்றித் தெரிவிக்கும் படி ஆஜ்ஞாபித்திருக்கிறார்கள்.

அதிரூபன்—பிதா! யான் வெகுநாளாக, ஞானவல்லியின் ஸௌந்தர்யத்தையும் குணாதிசயங்களையுங் கேள்விப் பட்டு அன்னவளையே மணந்துகொள்ள வேண்டு மென்று கருதிக்கொண்டிருந்தேன். அப்படியிருக்க, இப்பொழுது, அவளுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்தி ருப்பதாகத் தெரியவருகின்றது. ஆகையால், யான், என்தோழன் சர்வசீலனுடன், அக்கன்னிகையைத் தேடிச்சென்று, அரக்கனைக்கொன்று, ஞானவல் லியை அழைத்துப்போய் மணமாலைசூடி ஹஸ்திஞ புரத்துக்கு அரசனாகப் பட்டாபிஷேகமுஞ் செய்யப் பெற்று ஜயசீலனாய் வருகின்றேன். கருணைகூர்ந்து விடையளிக்க ப்ரார்த்திக்கின்றேன்.

சரபன்—கல்யாண்,குழந்தாய்! ராக்ஷஸ யுத்தஞ்செய்வதில்

சர்வ ஜாக்ரதையாயிருந்து தக்க உபாய மார்க்கத்தால் அரக்கனைக்கொன்று ஈஸ்வரானுக்ரஹத்தால் வெற்றிமாலை சூடிவரக்கடவாய்.

கர்வசீலன்—[மந்த்ரியை நோக்கி] பிதா! நமஸ்கரிக்கின்றேன். இளவரசரோடியானுஞ்சென்று உதவிபுரிந்து வர எனக்கு விடையளிக்க ப்ரார்த்திக்கின்றேன்.

சௌர்யகேது—கல்யாண், கண்மணீ! மந்த்ரிகளுக்குரிய கடமைப்படி ராஜகுமாரன் பின்சென்று, அரக்கனைக் கொல்வதற்கான சமயோசித ஆலோசனைகளை யெடுத்துக்கூறி, எவ்விதத்தினும் ஜயமடையும்படி துணை புரிந்து பத்ரமாகப் பாதுகாத்துவருவாய்.

கர்வசீலன்—பிதா அப்படியே நடந்துகொள்கிறேன்.

சௌர்யகேது—ஜாக்ரதையாக இருவரும் சென்றுவாருங்கள்.

[அதிரூபனும் கர்வசீலனும் விடைபெற்றுச் செல்கின்றனர்.]

இரண்டாவது அங்கம்

நான்காங் காட்சி

இடம்—பர்வதப்ரதேசம், குகை.
காலம்—காலை.
பாத்ரங்கள் — அதிரூபன், கர்வசீலன், ஞானவல்லி, குதர்க்கன்.

அதிரூபன்—தோழா! நாம் பலவிடங்களிலும் ராஜகன்னிகையைத் தேடியுங்காணாம லிங்குற்றோம். இதுவோ! அரக்கன் வசிக்கும் பர்வதப்ரதேசம். தந்த்ரமா

யுட் செல்லவேண்டும். நீ இங்குதானே சற்று தனித்திரு. நான் குஹைப்புறஞ்சென்று சுற்றிப் பார்த்து வருகிறேன்.

கர்வசீலன்—அரசே! வெகு ஜாக்ரதையாகச் சுற்றிப் பார்த்து கார்யசித்தியோடுவந்து சேருங்கள்.

[அதிரூபன் கர்வசீலனைப் பிரிந்துசெல்லல்.]

அதிரூபன்—[தனிமொழி] ஆஹா! இவ்வனமும், இந்த குஹையும் பார்வைக்கு என்ன ரமணீயமாயிருக்கின்றன! என்னவனப்பு! இந்த உபவனத்தில் பக்ஷி ஜாதிகள் தங்கள் தங்கள் பேடுகளோடு மாக்கிளைகளிலுட்கார்ந்து, கொஞ்சிக்குலாவி கலகலவெனச் சப்திக்கும் த்வனிகளும், மந்திக்கூட்டங்கள் மரத்திற்கு மரம் தாவுகின்ற வேடிக்கையும், மான் கூட்டங்கள் பந்திபந்தியாய்த் துள்ளிக் குதித்து விளையாடும் விநோதமும், மலர்கள் புஷ்பித்து கம் என்று வாசிக்கும் மணமும் என் மனதை யெவ்வளவு உத்ஸாகப் படுத்துகின்றன. [சற்றுயோசித்து] ஈதென்ன என் வலது தோளும் வலது கண்ணும் துடிக்கின்றன! இந்தச் சுபசகுனம் நாம் நினைத்துவந்தகார்யம் முடியுமென்பதற்கு அறிகுறியா யிருக்கின்றது. நல்லது; இவ்வனமுழுவதுஞ் சுற்றிப் பார்த்துவருவோம்.

[அதிரூபன்சென்று, ஒருமாத்தடியில் விசாரத்துடனிற்கும் ஞானவல்லியைக் கண்டு அவளது ரூபலாவண்யத்தைத் வியந்துபாடுகிறான்.]

சிங்கார வதிரூப மாதெழி லரம்பையோ!
சித்திர கலாப மயிலோ!
சீர்மையுற வார்த்தபொற் பதுமையோ! முனிவரர்கள்
தெண்டனிடு மோக ரதியோ!
கொங்கார் மலர்க்குழலி வடிவழ கெடுத்து நான்
கூறவெளி தோ வெனினு மிக்
குவலயத் திளைஞரை மயக்குகோ மளவல்லி
குளிர் வதனம் நிறைமதியமோ!
பொங்கார நுதலிளம் பிறையோ! வளைந்தவிரு
புருவங்கள் விற்களோ! விப்
புனிதவதி விழிகடிரு வமுதோ! ந ஞசியெட்
பூவோ! செவ் வாய் குமுதமோ!
அங்கார் செய் பவளமது மதரமோ! முல்லையி
னரும்போ பல்வரிசை முகுள
வம்புஜ மிரண்டோ தனங்க! ளினி யெதையிவளி
னவயவத்திற் குரைப்பேன்.

ஆஹா! எத்துணை வனப்பு வாய்ந்தவளாயிருக்கின்றாள் இப் பெண்மணி! இவளாரோ தெரியவில்லையே!—மணந் தால் இவளையே மணக்கவேண்டும். [*சற்றுநிதானித்து*] இவளுக்கு விவாஹம் ஆயிற்றோ என்னமோ தெரிய வில்லையே!—மனமே! சற்றுப் பொறு.—ஒருக்கால் நாம் தேடிவந்த கன்னிகையாக இவளிருக்கப்படா தா!—நமததிர்ஷ்ட மெப்படியோ! எதற்கும் அரு கிற்சென்று இவளது சரிதத்தை நன்றாய் விசாரிப் போம். [*நாற்புறமுஞ் சுற்றிச் சுற்றிப்பார்த்துக்கொண்டு சற்றுச் சமீபிக்கின்றனன்.*]

ஞானவல்லி—[*தனிமொழி*] எவ்விதம் இக்கொடிய அரக் கன் கையினின்றும் நாம் தப்புவது? எப்பொழுது

நம் பெற்ருேர்களைக் காண்போமோ! எனக்காக அவர்கள் எவ்வாறு துயருறுகின்ருர்களோ! [என்று கூறிக்கொண்டு இங்குமங்கும் பார்க்கும்போது அதிரூபனைக் காண்கின்றனள்.] இதேது! இங்கு யாரோ ஒருவர் வருகிருப்போலிருக்கின்றதே! [உற்றுப்பார்த்து]

சுந்தர சவுந்தர நிறைந்தவடி வழகரிவர்
சுரர்பாவி வாழ்த்த நின்ற
தூயங்கள கூபரன் ருனே! ஜயந்தனே!
தோகையர்க் கதி மோகனே!
எந்த சற்குணராஜ புதல்வனிவனே! வெனக்
கேற்றமண வாள னென்றே
எண்ணினே னிப்புருஷர் காட்சியே காட்சியிதை
யெவரடைந்தார்க ளென் போல்
மந்தஹாசம் பெருகு முகவசீகரமு மிரு
மந்த்ரபுய பார தீர
வண்ணமுமி னருள்புரிந் திலகுகண் களுமெனது
மனவசப் பட வகன்ற
விந்தைவாழ் மார்பினுல் லாஸகம் பீரமும்
விரைந்திவ் விடத்தி லின்றே
விரும்பியே கண்களாற் கண்டபாக் கியங்களே
மிகுந்திடும் பாக்ய மன்ருே!

ஆஹா! என்ன சுந்தர புருஷனு யிருக்கின்ருன்! கந்தர்வனே!—இந்த்ரன் மைந்தனுன ஜயந்தனே!—[சற்று நிதானித்து] ஓஹோ! நாம் இவனை இவ்வாறு வர்ணித்துக்கொண்டிருக்கின்ருேமே, ஒரு சமயம் அரக்கனு யிருந்தால் என் செய்வது? அவனே, தான் நினைத்த உருவத்தை யெடுக்கும் வல்லமை யுடையவனென்று என்னிடங் கூறியிருக்கின்ருனே.

அவனே ஒருக்கால் இவ்வுருவெடுத்து வந்திருக்கின்ருனே என்னவோ!—இல்லை. இல்லை. ஏனென்ருல், என்மனம் இவரையே நாடிச்செல்கின்றது.—இவர் ராக்ஷஸனு யிருந்தால்—என் மனம் செல்லுமா! செல்லவே செல்லாது. என் இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றன. இந்தச் சுபசகுனத்தாலும், என் மனம் இவரையே நாடிச்செல்வதாலும் இவர் அரக்கனுக இருக்கவேமாட்டார். எதற்கும் சமீபத்தில் வரட்டும் விசாரிப்போம். [தலையைக் குனிந்து கொண்டு பராமுகமாய் நிற்றல்.]

அதிரூபன்—[சமீபித்து] பெண்ணே! நீயார்? எந்தத் தேசம்? உன் பெயரென்ன? இங்கு தனியே வசிப்பதற்குக் காரணமென்ன? உனக்கு விவாஹமா யிருக்கின்றதா? உன் சரிதத்தை ஸவிஸ்தாரமாகத் தெரிவிப்பாய் சுந்தராங்கி!

ஞானவல்லி—அய்யா! தாங்கள் யார்? எந்தவூர்? தங்கள் நாமதேய மென்ன ? கொடிய ராக்ஷஸனிருக்குமிடத்திற்குத் தாங்கள் தனிமையாக வந்த காரணத்தை முன்னர் தெரிவித்தால்—விரும்புவீராயின், என் வரலாற்றையும் பின்னர் தெரிவிக்கின்றேன்.

அதிரூபன்—பெண்ணே! நான் குந்தல தேசத்தரசனது புதல்வன். என்னை அதிரூபன் என்றழைப்பார்கள். ஒருநாள், என் பிதாவும் நானும் தர்பாரிலிருக்கும் சமயம், ஹஸ்தினபுரத்தரசனது புதல்வியாகிய ஞானவல்லியம்மாள் ஒருநாள், தன் தோழிகளுடன், நந்தவனத்தில் உல்லாஸமாய்க் காலங்கழித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென ஓரரக்கன்

வந்து ராஜ குமார்த்தியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான் என்றும், அன்னவளை யெடுத்துச் சென்ற அரக்கனைக் கொன்று ஞானவல்லியம்மாளை அழைத்துவருவார்க்கு அக்கன்னிகையை மணம் புரிவிப்பதுடன் ஹஸ்தினுபுரத்துக் கரசனுகப் பட்டாபிஷேகமும் செய்விப்போம் என்றும் வள்ளுவன் பறை சாற்றினுன். நான் அன்னவளையே மணஞ் செய்து கொள்வதாக நெடுநாளாய் நினைத்துக்கொண்டிருந்தபடியால் பறைசாற்றினதைக் கேட்டதும், அவள் காணுமற் போனதற்காக, அதிக விசாரமுற்று, உடனே நானும் என் தோழனும் புறப்பட்டு, அநேகவிடங்களிற் றேடியும் அவளைக்காணுது, இம் மார்க்கமாக வரும்போது இந்தக் குஹைத் தென்பட்டது. அதோ தெரிகின்ற மரத்தடியில் என் தோழனை வைத்துவிட்டு ஞானவல்லியம்மாளை இவ்விடத்திற் றேடிப்பார்க்கவந்தேன். வந்தவிடத்தில் உன்னைக் கண்டேன். உன்வரலாற்றைத் தெரிவிப்பாய்.

ஞான—[தனிமொழி] இவர்கூறியவரலாற்றுல் இவர் குந்தலதேசத்து ராஜகுமாரனுகத் தெரியவருகிறுர். ஆனல், நாம் அரக்கனை விவாஹஞ் செய்துகொள்ள இன்னும் சம்மதியாததால், என் மனதைப் பரிசோதிக்கும் பொருட்டு அன்னவனே இவ்வுருக்கொண்டு வந்து ஏமாற்றுகின்றுனோ என்னவோ! எவ்வாறு இவரை நம்பி நமதெண்ணத்தை வெளியிடுவது? [சற்று யோசித்து அரக்கனென்றே பாவித்து வெளிப்படையாய்ப் பேசுதல்.] அய்யா! தாங்கள் குந்தலதேசத்தரசனது புதல்வனென்று சொல்கின்றீர்களே! தாங்கள்

இன்னாரென்பதாக எனக்குத் தெரியாதா! தாங்கள், எந்த சுந்தரரூபம் வேண்டுமானாலும் அதையெடுக்கும் சக்தியுடையவரென்று சொல்லியிருக்கின்றீர்களே! நான் விரும்பினாலல்லவா இவ்வுருவெடுத்து வர வேண்டும்! ஏன் இவ்வுருக்கொண்டுவந்து என்னைப் பரிசோதிக்கின்றீர்கள்? நானோ அபலை! என்னைப் பரிசோதிக்கவேண்டாம். நிஜரூபத்துடன்வந்து சம் பாஷித்தாலல்லவா எனக்கு சந்தோஷமாயிருக்கும்.

அதிரூபன்—[தனிமொழி] ஓஹோ! நம் வரலாற்றை இவ ளிடங்கூறியும் நம்மை யரக்கனென்றே சந்தேஹிக் கின்றனள். இந்த சந்தேஹத்தை யெவ்வாறு நிவர்த் திப்பது? [ஞானவல்லியை நோக்கி] பெண்ணே! என்னை அரக்கனென்றல்லவா சந்தேஹிக்கின்றாய்! நான் அரக்கனல்ல. ஆகாசவாணி யறிய நான் குந்த லதேசத்து மன்னன் மகனாகிய அதிரூபன்தான்.

அசரீரி—ஹே ஞானவல்லீ! இவனை அரக்கனென்று சந் தேஹிக்காதே. குந்தலதேசத்து ராஜபுத்ரன் என்று செவ்வையாய் நம்பு.

ஞான—[தனிமொழி] மெத்த சந்தோஷம். ஏதோ என் னைக் காக்கும்பொருட்டு ஈசன்றான் இவரை யனுப் பினார்போலும். ஆகையா லிவரிடம் நமது வரலாற் றைத் தெரிவிப்போம். [அதிரூபனை நோக்கி நாணத் துடன்] அய்யா! நான் ஹஸ்தினபுரத்து ராஜனு டைய மகள். என் பேர் ஞானவல்லி என்பார்கள். இவ்விடத்தில் வசிக்கும் அரக்கன்றான் என்னை யெடுத்து வந்தவன். தாங்கள் கருணைகூர்ந்து,

இவ்வரக்கனைக் கொன்று, என்னை என் தந்தையிடம் சேர்ப்பிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

அதி—பெண்மணீ! மெத்த சந்தோஷம். நீ கூறியபடி செய்யத் தயார். அரக்கனை உபாயத்தாற்றான் கொல்லவேண்டும்.—ராக்ஷஸர்களுக்கு உயிர்நிலை வேற்றுருவோடு தனித்திருக்குமென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். நீ, அவ்வரக்கனுக்குச் சற்று இணங்குபவள்போல் நடித்து, அன்னவனுயிர்நிலையை யறிந்து என்னிடங் கூறுவாயாகில் அவனைக் கொல்வது எனக்குச் சுலபமாயிருக்கும்; அது உன்னால்தான் ஆகவேண்டும். விவரமாகத் தெரிந்துகொள். மறந்துவிடாதே.

ஞான—ப்ரபோ! அப்படியே ஆகட்டும்; மறப்பேனா! ராக்ஷஸன் வரும் வேளையாய்விட்டது. தாங்கள் சற்றே மறைவாயிருக்க வேண்டும். அவன் வந்து போனபின் ஸம்ஜ்ஞை செய்கிறேன்; தாங்கள் வந்துவிடுங்கள்-

அதி—நல்லது :—ஞாபகமிருக்கட்டும்.

[எனக்கூறி ஞானவல்லியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே அதிரூபன் போகின்றான். சற்று நேரத்திற்கெல்லாம் குதர்க்கன் வருகின்றான்.]

குதர்க்கன்—அடீ பெண்ணே! இப்பொழுது, உனக்கு வேண்டும் ஆகாரவகைகள், கனிவர்க்கங்கள் இதோ கொண்டுவந்திருக்கின்றேன்; பயப்படாமல் புஜித்துவிட்டு என்னுடன் சந்தோஷமா யிருப்பாய்.

ஞான—[புன்னகையுடன்] அய்யா! தங்களைத்தவிர எனக்கு வேறு கதி கிடையாது. தங்கள் எண்ணம்போல் நடந்துகொள்ள சித்தமாயிருக்கிறேன். [சிறிது யோசித்து] ஆனல் ஒரு சங்கதி. தாங்கள் அடிக்கடி இந்தக் குகைறயில் என்னைத் தனியே வைத்துவிட்டு வெளியே போய்விடுகின்றீர்களே. யாராவது தங்களை, யுத்தஞ்செய்து, கொன்றுவிட்டால் பிறகு என் கதி யென்னகும்?

குதர்க்கன்—அடீ பெண்ணே! ஒருவராலும் என்னைக் கொல்ல முடியாது; ஏனெனில், எனதுயிர்நிலையை யாறுமறியார்கள்; அது ஓரிடத்தில் மறைவாயிருக்கின்றது.

ஞான—அப்படியல்ல; வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு. [சற்றே நிதானித்து] தங்களுயிர்நிலையை யாரு மறிய மாட்டார்களென்று சொன்னீர்களே! அதை யென்னிடம் தெரிவித்தால், தாங்கள் வெளியேபோயிருக்கும்போதெல்லாம், தங்களைப் பார்ப்பதுபோல் அதைப் பார்த்துக்கொண்டே யிருப்பேன். தங்கள் மனம்போலவும் நடக்க சித்தமாயிருப்பேன்.

குதர்க்கன்—சந்தோஷம் பெண்ணே! இதற்காகவா இதுகாறும் என்னை மகிழ்விக்காமலிருந்தனை! அடி பெண்ணே! நீ கேட்டுக்கொண்ட வண்ணம் எனதுயிர்நிலை யிருக்குமிடத்தை ரகசியமாகச் சொல்கின்றேன். சமீபத்தில் வந்து ஞாபகமாகக் கேள்.

[அரக்கன் கூறுவதை ஞானவல்லி அருகிற் சென்று செவிசாய்த்துக் கேட்கின்றனள்.]

ஞானவல்லி—சரி, தெரிந்துகொண்டேன்.

குதர்க்கன்—பெண்ணே! இந்த ரகசியத்தை ஒருவருக்கும் தெரிவிக்காதே; பத்ரம்! இனியாயினும் என்னுடன் சந்தோஷமா யிருக்கமாட்டாயா? நான் கொண்டு வந்த ஆகாராதிகளைப் புசித்துக்கொண்டிரு. ஏதோ எனக்குக் கொஞ்சங் களைப்பா யிருக்கின்றது; குஹைக்குள் சற்று நித்ரை செய்யப்போகின்றேன்.

[எனக்கூறி ஞானவல்லியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே இராக்கதன் நித்ரைக்கு குஹைக்குட் போகின்றனன். சிறிது நேரத்திற்கெல்லாம் ஞானவல்லி, குஹைக்குட் சென்று, அரக்கனது நித்ரையைப் பரிசோதித்து, வெளியே வந்து, அதிரூபனுக்கு ஸம்ஜ்ஞை செய்யவே அதிரூபன் வருகின்றான்.]

அதி—பெண்ணே! அறிந்துகொண்டாயா அவன துயிர் நிலையை?

ஞான—[களிப்புடன்] ஆம், அறிந்துகொண்டேன். இந்தக் குஹைக்கு வடபுறத்தில், சிறிது தூரத்தில், ஒரு தடாக மிருப்பதாகவும், அந்தத் தடாக மத்தியில் ஒரு செந்தாமரை மலர்க்குள் அரக்கனது உயிர் ஒரு வண்டாக இருப்பதாகவும், அந்த வண்டைத் தாமரை மலருடன் கொண்டுவந்து இந்தக் குஹை வாயிலின் கண் வைத்து எவனொருவன் நசுக்கிக் கொல்வானோ அப்பொழுது தன் ப்ராணன் போய்விடுமென்பதாக

வும் அரக்கன் என்னிடங் கூறியிருக்கின்றான். ஆகையால், தாங்கள் பகவானை த்யானித்துக் கொண்டு அவ்வண்டைப் பிடித்துவந்து குகை வாயிலின்கண் வைத்து நசுக்கி அரக்கனைக்கொன்று என்னைக் காக்கவேண்டும். என்னைக் கைவிடலாகாது. செல்லுங்கள் சீக்கிரம்.

அதி—பெண்மணீ! சந்தோஷம்; இதோபோய் வண்டைப் பிடித்துவந்து நசுக்கி ராக்ஷஸனைக் கொன்றுவிடுகிறேன். நீ யொன்றுக்குங் கவலைப்படாதே! பகவான் க்ருபைசெய்வார். இதோ வண்டைப்பிடித்து வரப் போகிறேன்.

[தடாகத்தை நோக்கிச் செல்கின்றனன்.]

ஞான—[தனிமொழி] நான் கோறியபடியே, என் மனமும் அவர் மனமும் ஒத்திருப்பதால், எவ்விதத்திலும் வண்டைக்கொன்று அரக்கனை மடித்து என்னை யழைத்துக்கொண்டு போவார். இதில் யாதொரு சந்தேகமுமிராது. ஈசனே! திக்கற்ற இவ்வேழை யைக் காக்கும்பொருட்டு, ராஜகுமாரனுக்கு முதலை களால் யாதொரு அபாயமும் நேரிடாமல் பாது காக்கவேண்டும்.

[அதிரூபன் சென்ற மார்க்கத்தையே பார்த்தவண்ணமா யிருக்கின்றாள்.]

இரண்டாவது அங்கம்

ஐந்தாங் காட்சி

இடம்—தடாகக்கரை.

காலம்—நண்பகல்.

பாத்ரங்கள்—அதிரூபன், ஈஸ்வரன்.

அதிரூபன்—அதோ தெரிகின்ற தடாகத்தைப் பார்த்தால் ஞானவல்லி கூறிய தாமரைத் தடாகம்போலிருக்கின்றது. [அருகிற் சென்று] ஆம், அரக்கன் ஞானவல்லியிடங்கூறிய தடாகம் இதுதான். அதோ தாமரைப்புஷ்பமும் தெரிகின்றது. இதிலிறங்கிப் பார்ப்போம் [இறங்குமுன் முதலைகள்வந்து மொய்த்துக் கொள்கின்றன; அதிரூபன் வெருண்டு வெளியே கரையேறி நின்று] அப்பா! முதலைகளெல்லாம் என்னை விழுங்கிவிடப் பார்க்கின்றனவே! எவ்வாறு அந்தத் தாமரைப்புஷ்பத்தைப்பெறுவது? தண்ணீரில் ஓரடி கூட வைக்கமுடியவில்லையே! இதற்கென்ன செய்வோம்? ஈசன்தான் நமக்கருள் புரியவேண்டும்

[பரமேஸ்வரனை த்யானிக்கின்றான்.]

உயிர்க்குயி ராகி யெங்கணும் நிறைந்த
வுத்தமா நித்தியா நந்தா
அயர்த்திலே னுன்னை யெப்பொழு தினுமெ
னப்பனே வுனதடி யனும்யான்
செயற்கருஞ் செயலைச் செய்யமேற் கொண்டேன்
சின்மயா இத்தடா கத்தினில்
நயத்தொடு நடுவே பூத்தநன் மலரை
நாதனே அடையுமா றருளே.

பரமேஸ்வரன்—பக்தா! உன் பக்திக்கு மெச்சினேன். வரத்தைப் பெற்றுக் கொள்.

அதிரூபன்—ப்ரபோ! நமஸ்கரிக்கின்றேன். இக்குளத்தின் மத்தியிலிருக்கும் செந்தாமரைப் புஷ்பத்தை யான டையுமாறு அருள் புரிய வேண்டும்.

பரமேஸ்வரன்—கல்யாண்; இதோ நான் உனக்கொரு மந்த்ரத்தை யுபதேசிக்கின்றேன்; அம்மந்த்ரத்தைப் பக்தியோடும் கரையிலிருந்து ஜபிப்பாயானல் அம்மலர் தானே உன்னிடம் வந்து சேரும். நீ வெகு சுலபமாய்ப் பெற்றுக் கொண்டு ஜயசீலனுகக் கடவாய். உனக்கு சகலமங்களங்களும் உண்டாகும்.

அதி—தேவதேவா! மஹாபாக்யம்! நமஸ்கரிக்கின்றேன். [ஈஸ்வரன் அந்தர்த்தானமாகின்ருர். அதிரூபன் கரையிலிருந்து ஜபஞ்செய்யும்போது புஷ்பம் அவனருகில் வந்து சேர்கின்றது.] பகவானுடைய அருளினுல் புஷ்பத்தைப் பெற்றுக் கொண்டேன். இதற்குள்ளேதான் அவ் வண்டு இருக்க வேண்டும். குவிந்திருக்கிற புஷ்பத்தை மலர்த்தினுல் வண்டு பறந்து போய் விடும்; பின்னர் நம் கோறிக்கைநிறைவேருது. ஆகையால், இம்மலரை மலர்த்தாமலே குஹைக்குக் கொண்டு போய் ஞானவல்லியிடங் காண்பித்து வண்டை நசுக்கி ராக்ஷஸனைக் கொன்றுவிடுகிறேன். [குஹைக்குச் செல்கின்றனன்.]

இரண்டாவது அங்கம்

ஆருங்காட்சி

இடம்—பர்வதகுஹை.

காலம்—பிற்பகல்

பாத்ரங்கள்—ஞானவல்லி, அதிரூபன், குதர்க்கன்.

ஞானவல்லி—என்ன! வண்டைப் பிடித்து வருவதாய்த் தடாகத்தை நோக்கிச் சென்றவர் இன்னும் வரக்காணுமே! என்செய்வது? வெகு நேரமாய் விட்டதே! அரக்கன் விழித்துக் கொள்ளும் சமயமாகின்றதே! ராஜபுத்ரனை முதலைகள் விழுங்கி விட்டனவோ! இல்லை! அப்படிபிராது.—மனமே! சற்றே பொறு; ஈசனருளால் எவ்விதத்திலும் வண்டைப் பிடித்துக் கொண்டு வந்து சேர்வார். யாரோ வருகிற சத்தங் கேட்கின்றதே! பார்ப்போம் யாரென்று. [நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து அதிரூபனைக் காண்கிருள்.அதோ வருகின்றூர். அவர் முகத்தை யுற்று நோக்குங்கால் கார்யசித்தியுடன் வருகிறூரென்றே நினைக்கிறேன். நம்மைக் காதலித்தல்லவா ராஜதநயன் வெகு ஶ்ரமப்பட்டுப் புஷ்பத்தைக் கொண்டு வருகின்றூர். ஆஹா! புருஷரென்றூல் இவரே புருஷர்! மணந்தால் இவரையே மணப்பேன்.

[ஆவலுடன் வரவை யெதிர்பார்க்கின்றனள்.]

அதி—பெண்மணீ! இதோ வண்டைப் புஷ்பத்துடன் கொண்டு வந்திருக்கிறேன்.

ஞான—[மெல்லிய குரலோடு] ப்ரபோ! மெத்த சந்தோஷம்; வேலையைச் சீக்கிரம் முடிக்கவேண்டும். தாமதிக்கக்கூடாது. அரக்கனே நன்றூயயர்ந்து நித்ரை

செய்கின்றான்; அவன் விழித்துக்கொள்ளு முன்னரே புஷ்பத்துடன் வண்டைநசுக்கிக் கொன்றுவிடுங்கள்.

அதி—பெண்மணீ! இதோ பார்! வாயிற்படியில் வைத்து நசுக்கிக் கொல்கின்றேன்.

[புஷ்பத்துடன் வண்டை நசுக்கிக் கொல்கின்றான்.]

குதர்க்கன்—ஹா! அடீ துரோஹீ! என்னைக் கொல்லவா என் உயிர்நிலையைக் கேட்டனை? அடி பாபீ! என் ப்ராணன் போகின்றதே! [என்று அரக்கன் படுக்கையி னின்றும் கீழேவிழுந்து புரண்டு புரண்டு ஞானவல்லிமுன் வந்து குற்றுயிராய்க் கிடக்கும்போழ்து]

ஞான—ப்ரபோ! அந்தக் கட்கத்தைச் சற்றே தாருங்கள்; என் கோபந்தீர இவனைக் குத்திக் கொல்கின்றேன். [கட்கத்தை வாங்கிக்கொண்டு மிகக் கோபத்துடன்] இந்த வாய்தானா மணந்துகொள்ளச் சொன்னது! இந்தக் கைகள்தானா என்னைத் தூக்கிவந்தன! [எனக் கூறி வாளினால் வாயிற்குத்தி, கைகளை வெட்டித் தள்ளுகின்ற னள். அரக்கன் இறந்து விடுகிறான்.] அப்பா! சனி யொழிந்தது. எவ்வளவு பெரிய உருவம்! இறந்த பின்னும் பார்க்கப் பயமாயிருக்கின்றதே! என்ன கோரரூபம்! அப்பா! கடவுள் காத்தனர். ப்ரபோ! என் பொருட்டுத் தாங்கள் மிக ப்ரயாசமெடுத்து அரக்கனைக்கொன்று என்னை ரக்ஷித்தீர்கள். இம் மஹோபகாரத்தை ஒருக்காலுமறவேன். தங்களு க்கு அநேக வந்தனம். இனி இவண் தாமதியாது நமது நகரத்தை நோக்கிச் செல்வோம்.

அதி—மிகவும் சந்தோஷம். இவ்விடத்தில் சற்றே தாம தித்திரு. அதோ தெரிகின்ற மரத்தடியிற் சென்று

என் தோழனையழைத்து வருகின்றேன். [போய் மந்த்ரி குமாரனை யழைத்து வந்து] இனித் தாமதியாது புறப்படுவோம். இதோ மந்த்ரி குமாரனை யழைத்து வந்துவிட்டேன்.

ஞான—ப்ரபோ! இவர்தானு தங்கள் தோழர்?

அதி—ஆம்.

ஞான—ப்ரபோ! சற்றே இங்கு நில்லுங்கள். மார்க்கத்தில் நமக்குவேண்டிய ஆஹாரவகைகளை, உள்ளே சென்று, சேகரித்து வருகிறேன்.

[எனக்கூறி ஞானவல்லி குஹைக்குட் செல்லும் போது ஞானவல்லியை யுற்றுப்பார்த்து கர்வசீலன் காமுறுகின்றனன்.]

கர்வசீலன்—[சிறிது விலகி நின்று; தனிமொழி] ஆஹா! இம் மாது சிரோமணி எத்தகைய அரிய வனப்பைப் படைத்தவளா யிருக்கின்ருள்! பார்க்கும்பொழுதே என் கண்கள் கூசுகின்றனவே! அரம்பையாதி தேவ ஸ்த்ரீகள் பலர்கூடி ஒருருவெடுத்துவந்த தங்கப்பதுமைபோல் ப்ரகாசிக்கின்றனள். இவளைப் பார்த்தது முதல் என் மனம் ஏதோ சபலிக்கின்றதே! என்ன செய்வேன்? இவளை யணையாவிடில் என்னுயிர் சற்றேனும் நிலையாதுபோலிருக்கின்றதே! ராஜகுமாரனிருக்கும்பொழுது நம்மாலென்ன செய்யமுடியும்? இவனே மிக்க பலசாலி. இருக்கட்டும்; மார்க்கத்திலேதேனும் சூழ்ச்சி செய்கின்றேன்.

ஞான—ப்ரபோ! இதோ ஆகாரவகைகளைச் சேகரித்து வந்து விட்டேன்; புறப்படுங்கள் சீக்கிரம், களிப்புடன் செல்வோம்.

மூன்றுவது அங்கம்

முதற்காட்சி

இடம்—இடையர்குடிசை.

காலம்—காலே.

பாத்ரங்கள் — ராமக்கோன், திம்மக்கோன், இடைச்சி.

ராமக்கோன்—அடியே குட்டீ! கஞ்சிகிஞ்சி காச்சிட்டியா? எதாலும் கொஞ்ச நஞ்சமிருந்தா கலயத்லெ ஊத்திக்கொண்டாயேன்!

இடைச்சி—என்னுளய்வு! விடியத்துக்கு முன்னே இப்பதானே குடிச்சே, அதுக்குள்ளே என்னமாத்தா ஒவவ்ரு பசிச்சிட்டுது. அந்த எய்வுவவுத்லே மன்னெ வாரிப்போட. மாடுகீடெல்லாங் கறந்து வந்தால்லோ எதாவது கஞ்சியே குடுத்துத்தொலப்பேன்.

[என்று சொல்லி முறத்திஞலடிக்கின்றனள்]

திம்மக்கோன்—வண்டியக்கா! நீ யேனிப்படிப் போட்டு மொறத்தாலே மச்சானெ மொத்ரெ! மாடுமேக்கப் போரத்துக்கில்லோ கஞ்சிகொண்டு போவக்கேக்ரார்.

ராமக்கோன்—

தெம்மாங்கு மெட்டு.

1. கன்றுக்கிரை போடவேணும் ஒநல்லாளே,—எநல்லாளே!
கடிதிற்சென்று புல்கொண்டுவா ஒநல்லாளே!

2. மாடுமேய்த்து நான்வருவேன் ஒநல்லாளே—எநல்லாளே!
வருவதற்கு முன்வருவாய் ஒநல்லாளே!

3. கஞ்சி கலயத்திற்கொண்டு வாநல்லாளே—எநல்லாளே!
காட்டிற்குப் போகவேணும்—ஒநல்லாளே!

4. மாலேமந்தை யொடுவருவேன் ஒநல்லாளே—எநல்லாளே!
வந்தவுடன் மகிழ்ந்திருப்போம் ஒநல்லாளே!

5. சிந்தைமிக வருந்தவேண்டாம் ஓநல்லாளே—ஏநல்லாளே!
சீக்கிரமே நான்வருவேன் ஓநல்லாளே!

இடைச்சி—அப்டிச் சொல்லித் தொலெக்ராதானே எய்வே. அப்பவே குடுத்து தொலச்சிருப்பேனே; இந்தா கஞ்சிக் கலயம். நீங்க மாட்டெல்லாம் ஓட்டிக்கிட்டுப் போயி நல்லாமேச்சிக்கிட்டு வாங்கோ.

[இடையர்கள் மாடுமேய்க்கப் போகின்றனர்]

மூன்றுவது அங்கம்

இரண்டாங் காட்சி

இடம்—வனத்தில் மரத்தடி.

காலம்—பிற்பகல்.

பாத்ரங்கள்—அதிரூபன், ஞானவல்லி, சர்வசீலன்.

ஞானவல்லி—ப்ரபோ! நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். நடந்துவந்த ஶ்ரமத்தால் கால்கள் நோகின்றன; பசியும் அதிகரிக்கின்றது. இதோ இம்மரத்தடியில் உட்கார்ந்து, நான் கொண்டுவந்திருக்கிற ஆகாரத்தைப்புசித்துச் சற்றே களைப்பாறி, பின்னர் புறப்படுவோம்.

அதி—அவ்விதமே செய்வோம் கண்மணீ!

[மூவரும் வந்து மரத்தடியிலுட்கார்ந்து உண்டி யயில்கின்றனர்.]

ஞான—ப்ரபோ! தாகத்திற்கு ஜலம் சம்பாதித்துவாருங்கள்; தாகம் அதிகமாயிருக்கிறது.

அதி—ராஜபுத்ரீ! இவ்விடத்தில் சற்று ஜாக்ரதையாயிருப்பாயானால், நானும் என் தோழனும்போய், அதிவிரைவில் ஜலங்கொண்டு வருகின்றோம்.

[அதிரூபனும் சர்வசீலனும் செல்கின்றனர்.]

மூன்றுவது அங்கம்

மூன்றுங் காட்சி

இடம்—கிணற்றோரம்.

காலம்—பிற்பகல்.

பாத்ரங்கள்—அதிரூபன், கர்வசீலன்.

கர்வசீலன்—[தனிமொழி] இப்பொழுது நமதெண்ணம் ஞானவல்லியைப்பற்றி நிற்கின்றது. அவளைச் சேராதபக்ஷத்தில் என் உயிர்நிலையாது. ஆயின் இவ்விளவரசன் உயிரோடிருக்கும்வரை நமதெண்ணம் நிறைவேறுது. ஆகவின், இவரை வஞ்சித்தே அப்பெண்ணைக் கைப்பற்றவேண்டும். வஞ்சித்தாலோ! ராஜத்ரோஹம் வந்து சம்பவிக்கும். ராஜத்ரோஹத்திற் கஞ்சினுலோ! அப்பெண்ணைச் சேர முடியாது. சேராவிட்டாலோ! என்னுயிர் போய்விடும். இந்தத் தர்மசங்கடத்திற்கு என்னசெய்வது? [சற்றேயோசித்து] இதில், தன்னுயிர் பெரிதா பிறருயிர் பெரிதா! தன்னுயிரைக்காத்தே பிறருயிரைக் காக்கவேண்டுமாதலால் அதிரூபனைக் கொன்றே தீரவேண்டும். எவ்விதங் கொல்வது? கொல்வதென்ருல் சாமான்யமா! நல்லது, ஒருயோசனை தோன்றுகின்றது. இப்போது நாம் எங்கே போகின்ருேம்? கிணற்றுக்கல்லவா போகின்ருேம்! அங்கு ஏதேனும், சமயோசிதமாக, ஒரு சூழ்ச்சி செய்வோம். [இருவரும் கிணற்றைச் சமீபித்தனர். கர்வசீலன் அதிரூபனைநோக்கி] நண்பா! இதோ ஒரு கிணறு

இருக்கின்றது. [கிணற்றை யெட்டிப்பார்த்து] இக் கிணற்றில் ஜலம் வெகு ஆழத்திலிருக்கின்றது. எவ்வாறு இறங்கி ஜலம் எடுப்பது?

[என்று கர்வசீலன் சொல்லும்போழ்து அதிரூபன் கிணற்றை யெட்டிப் பார்த்து.]

அதி—ஆம், ஜலம் வெகு ஆழத்திற்றானிருக்கின்றது. எவ்விதத்தில் தண்ணீர் எடுத்து வருவது?

[என்று ராஜகுமாரன் கிணற்றை யுற்றுப் பார்த்து யோசித்துக் கொண்டிருக்கும் போழ்து]

கர்வ—[தனிமொழி. கர்வசீலன் அதிரூபன்றோளிற்கையைப் போட்டுக்கொண்டு] இதுதான்சமயம் கிணற்றில்தள்ளி விடுகிறேன். [ராஜகுமாரனைக் கிணற்றிற்றள்ளி விட்டு தனிமொழி.] நானெண்ணியவாறு ராஜகுமாரனைக் கிணற்றிற் றள்ளிவிட்டேன். இனி அவள் என் கைவசந்தான். ஆனால், ராஜகுமாரனது கதியை எவ்வாறு ராஜபுத்ரியிடங்கூறி, அவள் மனதைத் தேற்றி, நம்மை யடையச்செய்வது?—சரி! ராஜகுமாரனைக் கிணற்றங்கரையில் வைத்துவிட்டு நாம் கிணற்றிலிறங்கியபோது ஒரு புலிவந்து ராஜகுமாரனைக் கவ்விக்கொண்டு போய்விட்டதென்று சொல்லி, நாமும் துக்கப்படுவதுபோல் பாவனைசெய்து, ஒருவாறு அவள் மனதைத்தேற்றி, நம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வோம்.

[என்று மனதி லாலோசித்துக்கொண்டு அழுகைக்குரலோடு ராஜ புத்ரியினிடம் வருகின்றான்.]

மூன்றாவது அங்கம்

நான்காங் காட்சி

இடம்—வனத்தில் மரத்தடி.

காலம்—மாலை.

பாத்ரங்கள்—ஞானவல்லி, சர்வசீலன், வியாக்ரம்.

ஞானவல்லி—[தனிமொழி] ஜலம் கொண்டு வரச்சென்ற என தின்னுயிர்க்காதலர் ஏன் இன்னும் வரவில்லை? அதிசீக்கிரம் வருவதாக என்னிடங் கூறிச்சென்றாரே! ஏன் இன்னும் வரக்காணோம்? என்மனம் ஏதோ ஒருவித சஞ்சலத்தை யடைகின்றதே! அய்யோ! ஈதென்ன எனது வலது கண்ணும் வலதுதோளும் துடிக்கின்றனவே! பெண்களுக்கு வலதுபுறந் துடித்தால் சுபமல்லவென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்களே! அப்படி எனக்கு என்ன சங்கடம் நேரிடப்போகின்றது! ஒருவேளை என் நாதருக்குத்தான் ஏதேனும் அபாயம் நேரிட்டிருக்குமோ! சீ! சீ!! அப்படியொன்றுமிராது. ஈசனே! நீர்தான் என் நாதரைக் காக்கவேண்டும். [உற்றுநோக்கி] அதோ! யாரோ ஒருவர் வருவதாய்த்தெரிகின்றது. ஆம்; மந்த்ரிதான். ஏதோ துக்கத்துடன் அழுது கொண்டு தனிமையாயல்லவா வருகின்றார். எங்கே! என் நாதரைக் காணோமே! ஒருவேளை என் நாதருக்கு ஏதேனும் ஆபத்துநேர்ந்ததோ! அய்யய்யோ! எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே! என்செய்வது?

எதற்கும் மந்த்ரிகுமாரன் அருகில் வரட்டும் விசாரிப்போம்.

[கர்வசீலன் கண்ணீர்வடித்துக்கொண்டு அழுபவன்போ லபினயித்துக்கொண்டு வருதல்]

கர்வசீலன்—அய்யோ! என்னசெய்வேன்! இவ்விதிக்காளாயினே! உன்னைப் பிரிந்து எவ்வாறு உயிர்வாழ்வேன்? எவ்விதம் என் துயரை யாற்றுவேன்? உன் றந்தைக்கு என்னசொல்வேன்? ஆ தோழா!

ஞான—மந்த்ரீ! எங்கே உமது தோழர்? அவரைவிட்டு அரைக்கணமும் பிரியாத நீர் எவ்வாறு தனித்து வந்தீர்? அவர்க்கென்னுயிற்று? சீக்கிரம் சொல்வீர்.

கர்வ—அம்மணீ! என்னசொல்வேன்? என் தோழனு! ஆ! அய்யோ! என்னென்று தெரிவிப்பேன்? அதைச்சொல்ல எனது நா வெழவில்லையே!

ஞான—சீக்கிரம் சொல்லுமய்யா சமாச்சாரத்தை, என் உயிரைக்காத்த மஹாபுருஷர் எங்கே?

கர்வசீலன்—ராஜபுத்ரரைக் கிணற்றங்கரையில் உட்கார வைத்துவிட்டு நான் ஜலந்திரட்டக் கிணற்றிற்குள் ளிறங்கினேன். அப்போது ஆ என்ற சத்தம் கிணற்றிற்குள்ளிருந்த எனக்குக் கேட்டது. என்னென்று சொல்வேன்? என் நா கூசுகின்றதே!

ஞானவல்லி—ஆ! என்ன? என்ன? என் காதலர்க்கு ஏதேனும் அபாயம் நேர்ந்ததோ! சீக்கிரம்சொல்லும்.

கர்வசீலன்—சத்தங்கேட்டவுடன் திடீரென்று வெளியே வந்து பார்க்கும்போது ஒரு புலி என் தோழனைக் கவ்விக்கொண்டு ஓடிற்று.

ஞான—ஆ! என் நாதரையா புலி கொண்டுபோயிற்று.

அய்யோ! அய்யோ!! என்செய்வேன்? நீர் சும்மாவா விருந்தீர்?

கர்வ—இல்லை அம்மணீ! உடனே நான் அதைப் பின்றொடர்ந்து வெகு தூரமோடினேன்; என்ன செய்வேன்? அது வெகு வேகமாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டதே! தூக்கிக்கொண்டு போகும்போழ்து அவர் எவ்விதம் துடித்தாரோ! என்ன பாடுபட்டாரோ! அதை நினைக்க நினைக்க என்மனம் பதைக்கின்றதே! ஆ! தோழா! [மூர்ச்சித்தவன்போற் கீழே வீழ்ந்து பாசாங்கு செய்கிறான்.]

ஞானவல்லி—ஹா! நாதா! உம்மைப் புலிக்கிரையாக்கிவிட்டு நானினி என்ன செய்வேன்? நாதனற்ற எனக்கு என்னகதி! ஹா! ஜகதீசா! [மூர்ச்சித்து விழுகிறாள். கர்வசீலன் மெதுவாயெழுந்திருந்து ஞானவல்லியை யுற்றுப் பார்த்து]

கர்வ—[தனிமொழி] நான்சொன்ன வார்த்தையினால் எங்கே இவள் உயிர் துறந்தாளோ! என்னமோ? பார்க்கிறேன். [கையைப் பிடித்து நாடி பார்த்து] ஆஹா! கைகள் எவ்வளவு ம்ருதுவாயிருக்கின்றன. புஷ்பத்தைத் தொட்டதுபோ லிருக்கின்றதே! [நாசியிற் கை வைத்துப் பார்த்து] ஸ்வாசம் வருகின்றது; உயிரிருக்கின்றது; இறக்கவில்லை. ஆஹா! இவள் மூக்கின் அழகு தானென்ன? சம்பகப்புஷ்பமோ! எள்ளின் பூவோ! என்னென்று சொல்வேன்? என்ன காந்தி! என்ன அழகு! இவள் துக்கத்துடன் மூர்ச்சித்திருக்கும் பொழுதே இவ்வளவு அழகாயிருந்தால் துக்கமில்லாது சந்தோஷமா யிருக்கும்பொழுது எவ்வாறு

பிரகாசிப்பாள்! இவளழகை இரண்டாயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாதென்றால் ஒரு நாவைப் படைத்த என்னால் முடியுமோ? பார்க்கப் பார்க்க என்மனம் காமபாதையாற் றவிக்கின்றதே! எவ்விதத்தில் இவள் மனதைத் தேற்றியிவளோடு சேர்வேன்?—பலாத்காரஞ் செய்தால், உயிர்துறந்தாலும் துறப்பள். பின்னர் நாம் என் செய்வது? எதற்கும், இனிய வார்த்தை கூறி மனதைத் தேற்றி நான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வேன். சம்மதியாவிட்டாலோ!—இக்காட்டில் இவளுக்கு உதவி செய்ய யாரிருக்கிறார்கள்? [நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து] நம்மைத் தவிர வேறொருவருமில்லையே! சமாதானத்தி லிணங்காவிட்டால், பலாத்காரஞ்செய்து என் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கிறேன். அதனாலென்னவானாலுமாகட்டும், பார்த்துக்கொள்கிறேன்.

[ஞானவல்லி மூர்ச்சை தெளிந்தெழுந்திருக்கும் தருணம் பார்த்து மூர்ச்சித்தவன்போல் மறுபடியும் படுத்துக்கொண்டு பாசாங்கு செய்கிறான்.]

ஞான—[மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து] ஆ! தெய்வமே! என்னை இக்கதிக்கா ஆளாக்கினை! இந்த ராஜதநயனையே விவாஹஞ்செய்து கொள்ளவேண்டுமென்று நெடுநாளாக நினைத்திருந்ததோடு, அரக்கனைக் கொன்று என்னைக் காத்த பின்னரும் இவரையே மணந்து கொள்வதாய் முற்றிலும் நம்பியிருந்தேனே! நான் எண்ணின வெண்ணமெல்லாம் வீணாயினவே! இனி என்கதி யென்னவாகும்!

பாபியாகிய எனக்கு இவ்விதத் துயரத்தையா விதித்தனை! நாதனற்ற இந்தத் தேகத்தை யான் வைத்திருந்து பலனென்ன? இப்பொழுதே அக்னி ப்ரவேசஞ்செய்து என் காதலர் சென்றவிடமே யானும் போய்ச் சேர்கின்றேன். [கர்வசீலனை யுற்றுப்பார்த்து] மந்த்ரி குமாரன் நண்பனுக்காகவல்லவா மூர்ச்சித்துக் கிடக்கிறான்! ஆகையால், இப்பொழுது இவனது மூர்ச்சையைத் தெளிவித்து, கட்டைகளைச் சேகரித்து அக்னிமூட்டச் செய்யவேண்டும்.

[மந்த்ரி குமாரனை மூர்ச்சை தெளிவிக்கின்றாள்.]

கர்வ—[மூர்ச்சை தெளிந்தவன்போ லெழுந்திருந்து] ஆ, தோழா! உன்னைவிட்டுப் பிரிந்து நான் என்னத்திற்கு இன்னும் இந்தத் தேகத்தை வைத்திருக்கவேண்டும்? அக்னி ப்ரவேசமாவதே உத்தமம்.

ஞான—மந்த்ரி குமாரா! இனி நாம் விசாரப்படுவதில் ப்ரயோஜனமில்லை. நாதரிறந்தவுடன் தன்னுயிரைத் துறப்பதே பதிவ்ரதைகளுக் கழகு. இதுகாறும் நான் உயிர் வைத்திருந்ததே பிசகு. ஆகையால், சீக்கிரம் காட்டுமுட்டைகளையும் கட்டைகளையும் சேகரித்து அக்னியை வளரும்.

கர்வ—[தனிமொழி] இனித் தாமதிப்பதிற் பயனில்லை. இவளோ! அக்னியிற் ப்ரவேசிக்கத் துணிந்துவிட்டனள். எவ்விதத்தினும், அக்னிப்ரவேசமாக வொட்டாமற் றடுத்து, நமது கார்யத்தை முடித்துக் கொள்ளவேண்டும்—[ஞானவல்லியை நோக்கி] பெண்ணே! எனக்கு ஒரு யோசனைத் தோன்றுகின்றது. அந்யாயமாக, யௌவனத்தோடுங் கூடிய இந்த

சௌந்தர்யரூபத்தை ஏன் வீணில் அக்னிக்கு இரையாக்கவேண்டும்? ராஜதநயன் என்ன உன்னை மணந்துகொண்டானா? இல்லையே! ஆகையால், அவன் தோழனாகிய என்னை மணந்துகொண்டு இன்பமனுபவித்துக்கொண்டிருப்பாய். உன்னைக் கொண்டுபோய் உன் பிதாவிடம் சேர்ப்பித்து, அதன் பின்னர் அவரது சம்மதியின்பேரில் உன்னை மணந்துகொள்கிறேன்.

ஞான—அடா பாபீ! என்ன வார்த்தை யுரைத்தனை? உன் மொழிகள் என் செவிகளில் நாராசம்போல் விழுகின்றனவே! சீ! துஷ்டா! என்முன் நில்லாதே. தோழனுக்கு விசாரப்படுகிறவன்போற் பாசாங்கு செய்தது இதற்காகத்தானா? அடா மித்ரத்ரோஹீ! உன்னைக் கண்ணுற் பார்ப்பதுந் தவறு. [முகத்தைத் திருப்பிக்கொண்டு] என்முன் நில்லாதே!

தர்க்கம்

ராகம் கமாஸ்; ஆதிதாளம்.

பல்லவி

சுர்வசீலன்—சேர ஓடிவாடி மோடிசெய்யாதே கூடி
சேர ஓடிவாடி.

அநுபல்லவி

மாரன்விடுசரமென் மார்பிற்படுமு னிரு
பாரதனங்கொடுத்தொய் யாரமா யணைமீதில் சேர

ஞான—யாரென நீ நினைத்தா யீ தடுக்குமோ போவப்பாலே
யாரென நீ நினைத்தாய்?

பாரினிற் பெரும்பழி சூழுந் தொடாதே சொன்னேன்.
தாரமோ வுனக்கதி காரமென்னட போடா யாரெ

கர்வ—கோமளவல்லி யிந்தக் கோப மென்னிட மேண்டி
ஆமோ வுன்ஜால மெல்லாம் யாரிடத்தினிற் செல்லும் சே

ஞான—மாமன் மகளோமுழு மூடனே வுனக்கு நான்?
காமலாகிரி மீறிக் கண்டுமயங்காதே போடா யா

கர்வ—ராஜகுமாரன் றனை நேசமாய்க் கூடியே சந்
தோஷமாயிருக்க நீ ஆசைகொண்டாயோ வீணே! சே

ஞான—நேசனை மோசஞ்செய்பி சாசேபெருந் ரோஹி
தோஷம் வருமிப்போதே நீசனே என்முனில்லாதே யா

கர்வ—என்னைவிட்டினி யெங்கு எகுவாய் நில்லடி
கன்னியுன் கணவன்யா னன்றியார்? சொல்லடி சே

ஞான—கன்னியெனை யணைய காதல்நோய் கொண்டுவந்தாய்
சின்னமதிப் பயலேயுனைச் செருப்பாலடிப்பேன் போடா

கர்வ—புலிகொண்டு போனவ னினிவரப் போகிறானோ
சலியாதே மனமிகச் சாமிநானல்ல வோடி! சே

ஞான—வலியுளோமென்றெண்ணியிவ் வார்த்தையுரைக்கிறாயோ
நலமின்றி யலைநாயே நாடாதே யெனைப்பேயே யா

கர்வ—உனக்கு மெனையன்றி வேறொருதுணையு மிலை
மனப்பரிவொடு நாமே மகிழ்ந்திருப்போம் கண்ணே சே

ஞான—எனக்குத் துணையிலையென் றுனக்குக் கவலையென்ன?
வனத்திற் றேவதையெனை வந்துகாக்கும் பாரடா யா

ஞானவல்லி—ஹே தெய்வமே! திக்கற்ற என்னை, என் கற்பிற்குப் பழுதுவராவண்ணம், நீர்தான் இத்தருணம் காக்கவேண்டும். ஆ! ஜகதீசா! [கர்வசீலன் ஞானவல்லியைப் பலாத்காரமாய்ப்பற்றி யிழுக்கப்போம் சமயத்தில், தற்செயலாய், ஒரு வ்யாக்ரம் போந்து கர்வசீலனைக் கவ்விக்கொண்டு போயது.] நல்லவேளை! என்

கற்பிற்குப் பங்கம் வராமல் பகவான் என்னைக் காப்பாற்றினர். சரி; இனி ஏன் தாமதிக்கவேண்டும்? தீவளர்க்கக் கட்டைகளைச் சேகரிப்போம்.

[ஞானவல்லி காட்டிலுள்ள கட்டை முட்டைகளைச் சேகரித்து அடுக்குகிருள்.]

மூன்றாவது அங்கம்

ஐந்தாங் காட்சி

இடம்—வனத்திற் கிணற்றங்கரை.

காலம்—மாலை.

பாத்ரங்கள்—ராமக்கோன், திம்மக்கோன். அதிரூபன்,

ராமக்கோன்—அடே மச்சான்! வவுருபசிக்குடா; கொஞ்சங் சஞ்சி குடிச்சிட்டு சருகுகிருகு போட்டுக்கிட்டு மாட்டெல்லாம் ஒட்டிக்கிட்டு ஊட்டுக்குப் போவண்டா.

திம்மக்கோன்—ஆமா மச்சான், எனக்குக்கூட பசிக்குது. அந்தா அந்த கெணத்தோரத்லேபோய் கஞ்சிகுடிப்பண்டா; வாடா போவம்.

[இருவரும் கிணற்றருகி லுட்கார்ந்து கஞ்சி குடிக்கின்றனர்.]

அதிரூபன்—ஏதோ மனிதக்குரல் கேட்கின்றதே!—யாரய்யா அங்கே இருக்கிறது? அய்யா! அய்யா!! கிணற்றுக்குள் விழுந்த என்னைக் கரையேற்றி விடுங்கள்.

ராமக்கோன்—இதென்னடா மச்சான்! கெணத்துக்குள்ளே ஆரோ ஒருத்தன் கத்ர சத்தங் கேக்குது.

திம்மக்கோன்—வா மச்சான் போய்ப்பாப்பம்.

[இருவரும் கிணற்றிற்குள் அதிரூபனைக் காண்கிறார்கள்.]

ராம }
திம்ம }—ஆரய்யா செணத்துக்குள்ளே?

அதிரூபன்—அய்யா! நான் ஒரு வழிப்போக்கன். தண்ணீர் குடிக்க வந்து கிணற்றில் தவறி விழுந்துவிட்டேன். சீக்கிரம் என்னைக் கரையேற்றுங்கள்; ப்ராணன் போகுந்தருணமா யிருக்கிறது.

ராமக்கோன்—அய்யா! இந்தா நாங்க போட்ர கவுத்தே இடுப்லே நல்லா கட்டிக்கிட்டு கையாலெ கவுத்தெ புடேச்சுக்கொ; நாங்க மேலே தூக்கிட்ரோம்.

[இருவரும் அதிரூபனைக் கிணற்றினின்றுங் கரையேற்றினர்.]

அதிரூபன்—அய்யா! உங்களுக்கு வெகு புண்யம். என் உயிரைக் காப்பாற்றினீர்களே! உங்களைக் கடவுள் ரக்ஷிப்பார். இதனால், உங்களுக்கு வெகு மேன்மையுண்டாகும். நீங்கள் யாவர்?

திம்ம—சாமீ! நாங்க ஆதவகொலம்; அந்தா தெரிய்தே அதான் எங்க குடிசெ. நாங்க மாடுமேய்க்க இந்தக் காட்டுக்கு வந்தோம். இப்ப நாங்க குடிசெக்கிப் போறம்.

அதி—எனய்யா! இதற்குச் சமீபத்தில் ஏதேனும் ஒரு பட்டணம் இருக்கிறதா?

ராமக்கோன்—ஆமாங்கசாமி! எங்க குடிசெக்கி கொஞ்சந் தொலெலெ அத்னபுரம்னு ஒண்ணு இருக்குங்கொ சாமி அத்லே எங்க மாராசா இருக்காங்கசாமீ!

அதி—அப்படியானல், அந்தப் பட்டணத்தில் என்னைக் கொண்டுபோய்ச் சேருங்கள் உங்களுக்கு வேண்டிய வெகுமதி செய்கிறேன்.

திம்ம—ஆனசரி; வாங்க சாமீ. நாங்க கூட்டிக்கிட்டுப் போய் உட்டுட்ரோம். [ராமக்கோனை நோக்கி] மச்சான் மாட்டெல்லாம் ஓட்டிக் கிட்டுப்போய் குடிசெய்லெ உட்டுட்டு அந்த வளியா அந்தவூர் வந்து சேந்திரு. நாங்களும் வந்துர்ரோம். நம்மஎல்லாரும் ஒண்ணுப் போவம். அவக்கிண்ணு வாமச்சான்.

[அதிரூபனும் திம்மக்கோனும் ஞானவல்லி யிருக்கும் மரத்தடியைநோக்கி வருகின்றனர்.]

அதி—[தனிமொழி]நம்மை வஞ்சித்துக் கிணற்றிற் றள்ளினதை யோசித்தால் ஞானவல்லியைக் கைப்பற்ற வேண்டு மென்ற எண்ணங் கொண்டவனுக வேண்டும். என்ன ராஜத்ரோஹம்? அடாபாபீ! உன்னையும் மித்ரனுக நம்பி துணைப்பற்றி வந்தேனே!— இதற்குள் ஞானவல்லியின் கதி என்னயிற்ரே?— என்மனம் கொஞ்சமும் ஸஹிக்க வில்லையே! சீக்கிரம் போய்ப் பார்க்கவேண்டும். அந்த மித்ரத்ரோஹியை இந்தக் கட்கத்தால் சித்ரவதை செய்துவிடுகிறேன். [திம்மக்கோனை நோக்கி] அப்பா! வா! நாம் அவ்வழியாய்ப் போவோம்.

திம்ம—வாங்க சாமி போவம். அந்தப் பாதையாக் கூட போவ்லாம் அந்த பட்டணத்துக்கு. [இருவரும் போம்பொழுது சிறிது தூரத்தில், ஞானவல்லி தீவளர்த்து அக்னிப்ரவேசமாகப் போவதை அதிரூபன் காண்கிருன்.]

அதி—அதோ, யாரோ ஒருபெண் அக்னிப்ரவேசமாகப்

போவதாய்த் தெரிகிறதே! அதுயார்? [சற்றுச்சமீபித்து] ஓஹோ நம் ஞானவல்லி போலல்லவா தோன்றுகின்றது! [நிதானித்துப் பார்த்து] ஆமாம் ஞானவல்லி தான்! சீக்கிரம் போய்த் தடுத்து விடவேண்டும்.

[விரைந்து ஓடிவருகின்றனன்.]

மூன்றாவது அங்கம்

ஆறுங்காட்சி.

இடம்—வனத்தில் மரத்தடி.
காலம்—மாலை
பாத்ரங்கள்—ஞானவல்லி, அதிரூபன், திம்மக்கோன்.

ஞானவல்லி—ஆ! ப்ராணநாதா! நீர் சென்ற விடத்திற்கே இதோ நானும் வந்து சேர்கிறேன். ஹா! ஜகதீசா!

[ஞானவல்லி அக்னியிற் குதிக்கப்போகும் சமயத்தில் அதிரூபன் ஓடிவந்து தடுத்துக் கட்டித் தழுவிக்கொள்ளல்.]

அதிரூபன்—கண்ணே! கண்ணே!! ஏன் அக்னிப்ரவேசமாகத் துணிந்தனை? [ஞானவல்லி திடுக்கிட்டு எறிட்டுப் பார்த்து, அதிரூபன் என்றறிந்து ஆநந்தபரவசமாகின்றனள்.]

ஞானவல்லி.—ஆ! ப்ராணநாதா! யான் தங்களை உயிருடன் மறுபடியுங் காணப்பெற்றேனே! என்

பாக்யமே பாக்யம்! இம்மட்டிலும் க்ருபைசெய்து மறுபடியும் நம்மிருவரையும் உயிருடன் ஒன்று சேர்த்த பரம கருணாநிதியாகிய பரமேஸ்வரனை மன தாரத் துதிப்போம்.

அதிரூபன்—என் இன்னுயிர்க்காதலீ! எதற்காக அக்னிப்ரவேசமாக யத்தனித்தனை? சர்வசீலன் என்ற அந்த த்ரோஹிப் பயலெங்கே?

ஞானவல்லி—ப்ராணநாதா! அந்த த்ரோஹியையா என் வாயினாற் சொல்லவேண்டும்! அப்பாபி, துயருற்றவன்போல் அழுதுகொண்டுவந்து, தங்களைப் புலி தூக்கிக்கொண்டு போய்விட்டதாகக் கூறி தன்னை மணந்து கொள்ளும்படி பலாத்காரம் செய்ய ஆரம்பித்தான். தக்ஷணமே ஒரு புலி வந்து அப்படுபாவியைக் கவ்விக்கொண்டு போய்விட்டது. நாதனற்ற நாம் ஏன் உயிர்வாழ வேண்டுமென்று அக்னிப்ரவேசமாகத் துணிந்தேன். தங்களுக்கென்ன நேர்ந்தது?

அதிரூபன்—என்னை அப்படுபாவிப் பயல் கிணற்றில் திடீரெனத் தள்ளி வந்து விட்டான். அவனை இக்கட்கத்திற் கிரையாக்க உத்தேசித்து வந்தேன். அதற்கு முன் பகவானே சிக்ஷித்துவிட்டார். சரி; நாம் இனித் தாமதிக்காது ஹஸ்தினாபுரத்தை நோக்கிப் புறப்படுவோம்.

ஞான—காதலரே! அப்படியே; இதோ வருகிறேன்.

திம்மக்கோன்—[ஞானவல்லியை உற்றுநோக்கி இருவர்க்கும் நமஸ்கரிக்கின்றான்.] சாமீ! கும்புட்ரேன். அம்மணீ! கும்புட்ரேன். நீங்க எங்கமவராசா மவளல்லொ?

நான் ஒங்களெ சிறு புள்ளெயா யிருக்றப்போ பாத்ருக்கேன். வாங்க நான் ஒங்களெ மவராசாகிட்டே கொண்டுபோய் வுட்டுட்றேன். எங்க மச்சானும் தொணெக்கி வந்து சேந்த்டுவான். வாங்கபோவ்லாம்.

[அதிரூபன், ஞானவல்லி, திம்மக்கோன் இம்மூவரும் போகும்வழியில் ராமக்கோன் வந்து சந்திக்கிறான். நால்வரும் ஹஸ்தினபுரத்தை நோக்கிச் செல்கின்றனர்.]

மூன்றாவது அங்கம்

ஏழாங் காட்சி

இடம்—ஹஸ்தினபுரத்து தர்பார்.

காலம்—இரவு.

பாத்ரங்கள்—கீர்த்திஸேநன், பர்வதகேது, அதிரூபன், ஞானவல்லி, ஸ்வயம்ப்ரபை, விகடன், கமலினி, ராமக்கோன், திம்மக்கோன் முதலாயினர்.

கீர்த்திஸேநன்—பறைசாற்றும்படி ஆஜ்ஞாபித்தும், இதுகாறும் நம் குமார்த்தியின் விஷயம் ஒன்றுந்தெரியவில்லையே! அவள் கதி யென்னாயிற்றோ! ஒன்றுந்தோற்றவில்லையே! என்மனம் சதா வருந்துகின்றதே!

பர்வதகேது—அரசே! கவலைப்படாதீர்கள்; யாரேனும் சென்று, அரக்கனைக் கொன்று, ஞானவல்லியை அழைத்து வருவார்கள். இது நிச்சயம்.

விகடன்—மஹாராஜா! நிச்சயம் என்பதற்கென்ன சந்தேகம்? பெண்ணும் கிடைக்கிறது, ராஜ்யமுங் கிடைக்கிறது. இவ்விரண்டிற்குமாசைப்பட்டு யார்தான் தேடிப் போகமாட்டார்கள்! பறையறையச் சென்ற வள்ளுவனை அப்பொழுதே விசாரித்தேன். மகததேசத் தாசனாகிய சபலனும், குந்தலதேசத் தரசகுமாரன் அதிரூபனும் அம்மாளைத் தேடப் புறப்பட்டு விட்டார்களெனச் சொன்னான். அன்றியும் அதிரூபனோடு துணைக்காக அவனது தோழன் கர்வசீலனும் போயிருக்கிறான். அவ்வரசிளங்குமாரிருவருள் ஒருவர் கட்டாயம் யமபுரியைப் பார்க்கப்போயிருப்பார்; ஒருவர் அரக்கனைக்கொன்று ஹஸ்தினாபுரியைப் பார்க்க நமது ஞானவல்லி யம்மாளோடும் வந்துசேர்வார். இதற்குத் தடையில்லை.

சேவகன்—மஹாராஜா! சந்தோஷ சமாச்சாரம்.

பர்வதகேது—என்னடா சந்தோஷ சமாச்சாரம்?

சேவகன்—குந்தலதேசத்தரசர் குமாராகிய அதிரூபன் என்பவர் நமது ஞானவல்லி யம்மாளை யழைத்துக் கொண்டு இதோ வருகிறார்கள்.

கீர்த்திஸேநன்.—அப்படியா! சந்தோஷம். மந்த்ரீ! நீர் சென்று மர்யாதையுடன் அழைத்துவாரும்.

பர்வத—உத்தரவு. [போயழைத்துவருகின்றனர்.] இதோ வந்துவிட்டனர்.

கீர்த்தி—[சிம்மாசனத்திினின்றுங் குதித்து ஞானவல்லியைத் தழுவிக்கொள்ளல்.] கண்மணீ! மறுபடியும் உயிருடன் உன்னைக் காணப்பெற்றேனே!

ஞானவல்லி.—பிதா! நமஸ்கரிக்கின்றேன்.

கீர்த்தி—கல்யாண்! என் அருந்தவப்புத்ரீ!

அதிரூபன்—அரசே! நமஸ்கரிக்கின்றேன்.

கீர்த்தி—கல்யாண்! அதிரூபரே! வாரும். இதோ, இந்த ஆசனத்தில் வீற்றிரும். [ஞானவல்லியைநோக்கி] என் கண்மணீ! அரக்கனால் எவ்வளவு வருத்தமுற்றனையோ! எவ்வாறு ஹிம்ஸித்தானே! நடந்த விஷயத்தை ஸவிஸ்தாரமாகத் தெரிவிப்பாய்.

ஸ்வயம்ப்ரபை–[ஓடிவந்து ஞானவல்லியைத் தழுவிக்கொண்டு] அக்கா உயிருடன் க்ஷேமமாகவந்து சேர்ந்தீர்களா?

ஞான—ஆம், தங்காய் ஸ்வயம்ப்ரபை, இம்மஹா புருஷரது பேருதவியால் க்ஷேமமாக வந்து சேர்ந்தேன். [அதிரூபனை யுற்றுநோக்கி ஸ்வயம்ப்ரபை நாணத்துடன் தலைகுனிந்து நிற்றல்] [தந்தையைநோக்கி ஞானவல்லி] பிதா! ஒருநாட்காலையில், யான் என் தோழிமார்களுடன் நமது உத்யானத்தில் உலாவப்போயிருந்தபொழுது ஓரரக்கன்வந்து திடீரென என்னை யெடுத்துப்போய் குஹையில் வைத்திருந்தான். அவன் மணந்துகொள்ளும்படி வேண்டினன். அதற்கு நான் 'என் பெற்றோர்களைவிட்டுப் பிரிந்த விசாரத்தாலும், திடீரென எடுத்துவந்த பீதியாலும் என்மனம் குழப்பமாயிருக்கிறது. சிறிதுகாலத்திற்குள் என் மனம் ஒருவாறு சமாதானத்தை யடையும்; அதன் மேல் ஆகட்டும்' என்று போக்குச்சொல்லி விசாரப் பட்டுக் கொண்டிருந்தேன். சிலநாளைக்கெல்லாம், இம்மஹாபுருஷர் குஹையருகில் வந்து என்னைக் கண்டு அரக்கனது உயிர்நிலையைத் தெரிந்துரைக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்மேல், யான்

அரக்கனிடம் தந்த்ரமாகத் தெரிந்துரைத்தேன். உடனே இவர்சென்று அரக்கனது உயிர்நிலையாகிய வண்டைப் பிடித்துவந்து நசுக்கி அரக்கனைக் கொன்று, என்னை யழைத்துக்கொண்டு தன் றோழ னோடும் வரும்வழியில், ஒருமரத்தடியில் நாங்கள் பசியாறிக் கொண்டிருக்கும்போது தாகத்திற்குத் தண்ணீர் வேண்டுமெனக்கேட்டேன். தக்ஷணமே இந்த ராஜபுத்ரர் தன் றோழனோடு கிணற்றருகிற் போனபோது மந்த்ரிகுமாரன் இவரைக் கிணற்றிற் றள்ளிவிட்டு, என்னிடம்வந்து, ராஜபுத்ரரைப் புலி தூக்கிக்கொண்டு போய்விட்டதாய்ப் பொய்புகன்று, தன்னை விவாஹஞ் செய்துகொள்ளும்படிக்கேட்டு, பலாத்காரம் செய்ய யத்தனித்தபோது அகஸ்மாத் தாய் ஒரு புலி வந்து மந்த்ரிகுமாரனைத் தூக்கிச் சென்றுவிட்டது. ஈஸ்வரானுக்ரஹத்தால் தப்பித் துக்கொண்டேன். ஆயினும் யான், நாதனிறந்த பின் என் உயிர் வாழவேண்டுமென்று அக்னி ப்ரவேசமாகத் துணிந்தேன். இதோ நிற்கின்ற ராமக்கோன், திம்மக்கோன் என்ற இடையர்களால் கிணற்றினின்றும் வெளியேற்றப்பெற்ற எனது பிராணநாதன் ஓடிவந்து அக்னியிற் புகவொட்டா மற் றடுத்து ரக்ஷித்து இங்கழைத்துவந்தார். ஆகை யால், என்னை இருமுறையு முயிர்காத்த இம்மஹா புருஷர்க்கே விவாஹஞ்செய்து கொடுக்கப் ப்ரார்த் திக்கின்றேன். இதோ நிற்கும் என் தோழி ஸ்வயம் ப்ரபைக்கு, முன்னர், நான் விவாஹஞ்செய்துகொள் ளும் கணவர்க்கே ஸ்வயம்ப்ரபையையும் விவாஹஞ்

செய்து வைப்பதாய் வாக்குத்தத்தம் செய்திருந் தேன். அந்த ப்ரகாரம் மந்த்ரியின் சம்மதத்தின்பே ரில் ஸ்வயம்ப்ரபையையும், என் கணவராகிய, இம் மஹானுக்கே மணஞ்செய்து கொடுக்கப் ப்ரார்த்திக் கின்றேன்.

கீர்த்தி—மந்த்ரீ! நமது குமார்த்தி கூறும் வண்ணம் செய்வதில் உமக்கு ஏதேனும் தடையுளதோ?

பர்வத—மஹாராஜ! ஞானவல்லியம்மாளுக்கு எது சம் மதமோ அதுவே எனக்கும் சம்மதம். [ஸ்வயம்ப்ர பையைப்பார்த்து] கண்மணீ! ஞானவல்லியம்மாள் கூறியதைக் கேட்டனையா? உனக்குச் சம்மதந் தானே!

ஸ்வயம்—பிதா! ஞானவல்லியம்மாள் கூறியபடி நடந்து கொள்வதே என் சம்மதம்.

ஞான—[அதிரூபனை நோக்கி] ப்ராணநாதா! என்னை விவா ஹஞ் செய்துகொள்வதுடன், இதோ நிற்கின்ற என் தங்கை, ஸ்வயம்ப்ரபையையும் தாங்கள் மணந்து கொள்ளவேண்டும்.

அதி—பெண்ணே! உன் சம்மதப்படி நடந்துகொள்ள நான் தயாராயிருக்கிறேன்.

கீர்த்தி—மந்த்ரீ! விவாஹத்திற்கு வேண்டிய விஷயங் களைத் தயார்செய்யக்கடவீர்.

பர்வத—அரசே! எல்லாந் தயாராயிருக்கின்றன.

கீர்த்தி—சந்தோஷம். இந்தச் சுபமுகூர்த்தத்திலேயே அதி ரூபனுக்கும், நமது புத்ரி ஞானவல்லி, உமது புத்ரி

ஸ்வயம்ப்ரபை ஆகிய இவ்விருமகளிர்க்கும் விவாஹம் மங்களகரமாக நடக்கட்டும்.

[விவாஹம் மங்களகரமாக நடந்தேறியது.]

விகடன்—மஹாராஜா! குந்தலதேசத் திளவரசராகிய அதிரூப மஹாராஜற்கு ஞானவல்லியம்மாள், ஸ்வயம்ப்ரபையாகிய இருவரையும் மணஞ்செய்துகொடுத்ததுபோல், இதோ நிற்கின்ற கமலினியையும் எனக்கு விவாஹஞ்செய்துகொடுக்க வேண்டிக்கொள்கிறேன். நான் அன்றே அவளுக்காகத் தயார்செய்து வைத்திருக்கிற புஷ்பமாலை இதோ இருக்கின்றது. உத்தரவாகவேண்டும்.

கீர்த்தி—விகடா! அவ்விதமே செய்துகொள்.

விகடன்—மஹாராஜா! மஹாபாக்யம்.

[விகடன் கமலினியின் கழுத்தில் வதங்கிய மாலை யொன்றைப் போட்டு சந்தோஷிக்கின்றான்.]

அதிரூபன்—மஹாராஜ! என்னைக் கிணற்றினின்றுங் கரையேற்றிய, இதோ நிற்கும்,இந்தத் திம்மக்கோன் ராமக்கோன் என்ற இருவர்க்கும் தக்கபடி சம்மானஞ் செய்தனுப்பக் கேட்டுக்கொள்கின்றேன்.

கீர்த்திஸேநன்—மந்த்ரீ! நமது மாப்பிள்ளை அதிரூபர் கேட்டுக் கொண்டபடி இவ்விடையர்களுக்குத் தக்கபடி சம்மானஞ் செய்தனுப்புவீர்.

பர்வதகேது—மஹாராஜ! உத்தரவு. [சேவகனை நோக்கி] அடே சேவகா! இவர்களை நம்கஜானுவுக்கு அழைத்துக் கொண்டு போய் இவர்கள் சுமக்கக் கூடிய பணம் கொடுத்தனுப்பும்படி மஹாராஜா அவர்கள்

ஆஜ்ஞை யென்று தெரிவித்து சம்மானஞ் செய்தனுப்பும்படி செய்; போ சீக்கிரம்.

சேவகன்—ப்ரபோ! உத்தரவு.

கீர்த்திஸேநன்—மந்த்ரீ! எனக்கு வயோதிகதசை ஸம்பவித்தபடியால், நான் ஆத்மலாபத்தைக் கருதி, ஆரண்யஞ் சென்று தவமியற்றப் போகின்றேன். ஆகையால், நான் கூறிய வாக்குத்தத்தப்ரகாரம், இந்த அதிரூபரை, நமது ராஜ்யத்திற் கரசராகப், பட்டாபிஷேகஞ் செய்து வைக்கப் போகின்றேன். நீர் நம்மிடம் நடந்து வந்தது போல் அதிரூபரிடத்திலும் தக்கபடி நடந்து ராஜ்யத்தை தர்மமார்க்கமாகப் பரிபாலிக்கச் செய்து வரக் கடவீர்.

பர்வதகேது—மஹாராஜ! உத்தரவு. அப்படியே நடந்து கொள்கிறேன்.

[பட்டாபிஷேகம் நடக்கின்றது.]

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்த்து

ராகம்-சங்கராபரணம்; தாளம்-ரூபகம்.

கார்த்தி கேயர் திருவருளினல் காசினி யென்றும் வாழ்கவே.
பார்த்திபர் எட்ட பூபதி புத்ர பாக்யம் பெற்று வாழ்கவே.
சீர்த்தி சேர் ஞானவல்லி நாடகம் தேர்ந்து சந்ததம் வாழ்கவே.
பூர்த்தியாய்ப் படித்தோர் நடித்தவர் பூரித்தோர் நன்கு வாழ்கவே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

Madras : G. C. Loganadham Bros., The Guardian Press